திராவிடநாடு

விலை அணா 2

மலர் 14 இதழ் 45



காசி முதல் கன்யாகுமரிவரை 'தேசீய ரோடு' போட 6 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்துள்ளதாம் டில்லி சர்க்கார். ஏற்கனவே உபயோகத்திலிருக்கும் பல ரோடுகளை இணைத்து இந்தப் பாதை அமைக்கப்படுமாம். மொத்த நீளம் 1519 மைல். எட்டு 'ராஜ்யங்களின், வழியாக இப்பாதை செல்லும். இதன் நோக்கம், இந்தியா ஒரே நாடு என்பதை வலியுறுத்தவாம்!

*

புது டில்லியில் ஒவ்வொரு மாகாண காங்கிரஸ் தலைவர்களையும் கூட்டி கட்சியை எப்படி வலிவுள்ளதாக்குவது என்று மே 3ந் தேதி ஆலோசித்திருக்கிறார், தேபர். அப்போது பம்பாய் காங்கிரஸ் தலைவர் சொன்னாராம், "காங்கிரஸ் உருப்படவேண்டுமானால், முக்கிய காங்கிரஸ் தலைவர்களில் 200 பேர் எந்தப் பட்டம் பதவிகளிலும் ஈடுபடாமல், தினசரி காங்கிரசுக்காகவே பணியாற்றவேண்டும்" என்பதாக. இந்த யோசனையை ஆதரித்துப் பேச அக்கூட்டத்தில் ஒரு ஆள் கூடக் கிடைக்கவில்லையாம்!!

*

"இந்தியா ஒரே நாடென்று பேசுகிறீர்கள். ஆனால், வடஇந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்குமிடையில் வேற்றுமைகள் காட்டப்படுகிறது. இது நீடித்தால் நூறுஆண்டுகளுக்குமுன் அமெரிக்காவில் நடைபெற்றதே, வடஅமெரிக்காவுக்கும் தென்அமெரிக்காவுக்கும் உள்நாட்டுப் போர் அதைப்போல் இங்கும் மூளக்கூடும்" என்று டில்லி பார்லிமெண்டில், டாக்டர் அம்பேத்கார் எச்சரித்துப் பேசினராம்.

*

சேலத்திலுள்ள ஒகனக்கல் நீர் வீழ்ச்சியை உபயோகித்து மின்சாரம் தயாரிக்க உதவிசெய்யவேண்டி சேலம் காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினரான எஸ்.வி.இராமசாமி டில்லிக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பினராம். அதற்கு டில்லி, இத்திட்டம் அவ்வளவுமுக்கியமானதல்ல — என்று பதிலளித்துவிட்டதாம், கடந்த 4ந் தேதி.

*

1955 பிப் 4-ல் சூரத் மாவட்ட காட்டிலாகா தொழிலாளர்கள் மாநாடு நடைபெற்றது 3000-ஆதிவாசிகள் கூடியிருந்தார்கள். ஆனல் ஒருவருக்காவது பேசியது புரியவில்லை! காடுகளிலிருந்துவந்த அவர்கள் குஜராத்தியைப்போலொரு மொழியில் பேசினலும், குஜராத்தி சரிவரப் புரியாது. அதிகாரிகள் அழகான குஜராத்தியில் பேசினர்கள்! முக்கியவரான பம்பாய் காட்டிலாகா அமைச்சர் ஒய். பி. சாவன் இந்தியில் பேசினர், தனக்கு குஜராத்தி தெரியாதென்று. இந்த 'ஏக இந்தியா'வின் அழகைப் பார்த்தீர்களா!!

*

கம்யூனிஸ்டு, கிளர்ச்சிக்காரர்களை அடக்க மலேயா முதலமைச்சர் ஒரு விந்தையான முடிவு செய்துள்ளாராம். கிளர்ச்சிக்காரர்களுக்கு காடுகளுக்கு அருகிலிருக்கும் மக்கள் மூலம் உணவுப் பொருள்கள் போவதால்தான், அவர்களால் இக்கிளர்ச்சியை நடத்தமுடிகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். அதனல், உணவுப் பொருள்களை அவர்களுக்குக் கிட்டாமற் செய்யவேண்டுமென்பதற்காக அவர் ஒரு சட்டம் போட்டிருக்கிறார். அதன்படி காட்டுப் பிரதேசங்களுக்கு அருகில் வாழும் யாரும் தனித்தனியாக சமையல் செய்து சாப்பிடமுடியாது; அப்படி விரும்பினலும் அவர்களுக்குத் தனித்தனியாக உணவுப் பொருள்கள் எதுவும் தரப்படமாட்டாது அதற்குப் பதில், ஒவ்வொரு வட்டாரத்திலும், பொதுவாக சமையல் செய்யப்படும்-சர்க்காரின் பார்வையில். அங்குபோய் அவர்கள் சாப்பிட்டுவிட்டுத் திரும்பலாம்!

*

பண ஆசை, அடடா, என்ன பாடுபடுத்திவிடுகிறது! அமெரிக்காவிலுள்ள ஒரு ஊரில், ஒரு மகன் தாயையே கொன்றானும்! தாய் தன்னுடைய உயிரை சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு இன்ஷியூர் செய்திருந்தாளாம். அவள் செத்துவிட்டால் அந்தத் தொகை தன்னைச் சேருமென்பதால், வெடிகுண்டுவைத்து அவளைத் தீர்த்துக் கட்டினனும். போலீசார் விசாரித்த போது, உடனே அவன் உண்மையை ஒப்புக்கொள்ளவில்லையாம். உன் மனைவியையும் இந்த வழக்கில் சேர்க்கப்போகிறோம் என்று மிரட்டவே, 'ஐயா! ஐயா! அவளை ஒன்றும் செய்யாதீர்கள்' என்று அலறி எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டானும்.

*

குண்டூரில் களவுபோனதாகச் சொல்லப்படும் கரன்சி நோட்டுக்களில் ஒரு 100-ரூபாய் மே 3-ந்தேதி திருப்பதி கோயில் உண்டியலில் கண்டெடுக்கப்பட்டது.

*

கோயில்களில் அர்ச்சகர்கள் இருக்கிறார்களல்லவா? அவர்களுக்குப் பரீட்சைகள் வைக்கவேண்டும் என்று ஆந்திர சர்க்கார் ஆலோசனை செய்கொண்டுள்ளதாம்!

*

"திருப்பதி தேவஸ்தானத்தின் ஆதரவின் கீழ் நடக்கும் 'ஓரியண்டல் இன்ஸ்டியூட்டில் சமஸ்கிருதம் தெலுங்கு மொழிபயிலுபவர்களுக்கு மட்டும் சாப்பாட்டு வசதி செய்யப்படுகிறது. தமிழ் பயிலுபவர்களுக்கு மறுக்கப்படுகிறது. இந்த அநீதியைக் கேட்பாரில்லையா?" என்று தஞ்சையில் ஏப் 22-தேதி நடைபெற்ற தமிழாசிரியர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்த டாக்டர் அ. சிதம்பரனதன் காரசாரமாகக் கேட்டிருக்கிறார். மேற்படி மாநாட்டை திறந்துவைத்த காமராஜ் இதற்கு என்ன சொன்னரோ தெரியவில்லை!!

*

உலகத்திலேயே ஒரே இந்து மன்னர் என்பதால் நேபாள மன்னருக்கு நடைபெற்ற முடிசூட்டு விழாவை ஏடுகள் யாவும் பெருமிதமாகப் போட்டுள்ளன. 87-வயதான ராஜகுரு பிரஜைகளை நோக்கி சமஸ்கிருதத்தில் "பிரஜைகாள்! இவர்தாம் உங்கள் மன்னன் இவரே சோமன். பிராம்மணர்களின் அரசன்" என்றாராம். பிறகு, மன்னர் தனி அறைக்குச் சென்று இமாலயச் சாரலிலுள்ள பலவித புண்ணிய ஸ்தலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட களிமண்ணைத் தடவிக் கொண்டாராம்!

*

அதுமட்டுமா? மன்னருக்கு நான்கு திக்குகளிலிருந்து தைலங்கள் வைக்கப்பட்டன. கிழக்கிலிருந்து தங்கக் கிண்ணத்திலிருந்து நெய்யை ஒரு பிராம்மணன் தடவினர்! மேற்கிலிருந்த க்ஷத்திரியர் வெள்ளிப் பாத்திரத்திலிருந்து பால் எடுத்துத் தடவினர். தெற்கில் நின்ற வைசியர் தாமிரப் பாத்திரத்திலிருந்து தயிரை எடுத்துத் தடவினர், வடக்கிலிருந்த நான்காம் வருணத்தவர் (யார்? என்பது அறிவீர்களல்லவா நீங்கள்!) பித்தளைப் பாத்திரத்திலிருந்து தேனைத் தடவினராம்!

*

மணிமகுடங்கள் சாயும் இந்தக் காலத்தில், மணிமகுடம் புனையும் ஒரு இந்து அரசனைச் சென்று நேரில் கும்பிட்டு நிற்பதாக டாக்டர் இராதாகிருஷ்ணனின் படம் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்ததே உங்களுக்குக் கவனமுள்ளதா?

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 45
13–5–56

"கோக்கோ" நாடு!

15-ம் நூற்றாண்டுமுதல் அந்நியரின் பிடியில் அகப்பட்டு அவதியடைந்துவரும் ஆபிரிக்கப் பிரதேசத்து ஆதிக்குடிகளில் பலர் இன்றையதினம் எழுச்சி பெற்று விடுதலைக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கருப்பு நிற மக்களை வெள்ளையர் கொடுமைப்படுத்துவதை எதிர்த்து ஒரு பக்கமும் அப்படிப்பட்ட வெள்ளையரிடமிருந்து அரசியல் ஆதிக்கத்தைப் பெற இன்னொரு பக்கமும் பெருங் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன.

அல்ஜீரியா, மொராக்கோ, டுனீஷியா முதலிய பகுதிகள் எகிப்தை ஒட்டியிருப்பவை—ஐரோப்பியா வாடை எளிதில் எட்டக் கூடியவை பெரும்பாலும் முகம்மதியர்கள் வாழ்பவை. இவை, பிரெஞ்சு ஆதிக்கத்தின் வசமிருப்பதால், அதனை எதிர்த்து தினசரி 'இரத்தக்குளம்' ஏற்பட்டுக்கொண்டுள்ளது! பிரெஞ்சு ஆதிக்கமும், இந்தப் பிராந்தியங்களுக்கு சுதந்திரம் அளித்துவிட வேண்டியதுதான் என்கிற நிலைமைக்குத் தன்னைத் தயாரித்துக்கொள்ளத் துவங்கி விட்டது!!

15-ம் நூற்றாண்டு மாறி 20-ம் நூற்றாண்டுக்காலம் இது. இனி காலனி ஆதிக்கம் செல்லுபடியாகாது என்பதை ஐரோப்பிய நாடுகள் உணரத் தலைப்பட்டுவிட்டன.

அதன் அறிகுறியாகத் தன் வசம் கிடக்கும் அல்ஜீரியாவுக்கும் கோல்டு கோஸ்டுக்கும் சுதந்திரம் அளிக்கப் பிரிட்டன் முன்வந்துள்ளதாகத் தகவல் வந்துள்ளது.

மலேயாவுக்கு அடுத்தபடி கோல்டுகோஸ்டுக்குச் சுதந்திரம் அளிக்கத் தயார் என்று அறிவித்து விட்டார்கள்! அடுத்த மார்ச்சு மாதம் அதிகார மாற்றம் நடைபெறப்போகிறதாம்!!

இந்தச் செய்தி கேட்டதும், கோல்டு கோஸ்டு மக்கள் ஆனந்தப்பள்ளுப் பாடுகின்றனர். அவர்களது தலைவரான நிக்ருமா வெற்றிக் கண்களோடு தெரிவிக்கிறார் "கோல்டு கோஸ்டு சுதந்திரம் பெற்றதும் என்ன செய்யப்போகிறேன் தெரியுமா? தென் ஆபிரிகாவில் நிறவெறியாடும் ஸ்டிரைடம்மை அழைக்கப்போகிறேன்!" என்பதாக. விரோதியை அழைத்து விருந்துவைக்கப் போகிறேன் என்கிறார்! ஸ்டைர்டம் ஏற்கிறானோ, இல்லையோ, கோல்டுகோஸ்டு சுதந்திரம் பெற்றால், அதற்குச் சம அந்தஸ்துதரும் அவசியத்துக்கு அவன் ஆளாகவே நேரும். கருப்பர் எதிரில் நான் அமர்வதா?—என்று சர்ச்சிக்கும் அவனுக்கொரு சோதனைக் காலம்தான்!

கோல்டுகோஸ்டு விடுதலையடையும் தினத்தை, அருகிலுள்ள நீக்ரோ நாடுகளும் மக்களும் ஆவலோடு கவனித்துக் கொண்டுள்ளன.

நமது நேரு பண்டிதரும் அதற்குள், அவசர அவசரமாக "ஐயன்மீர்! தாங்கள், எனது இந்தியாவுக்கு விஜயம் செய்யவேண்டும்" என்று நிக்ருமாவுக்கு அழைப்பு அனுப்பியுள்ளாராம், அண்மையில்! கோல்டுகோஸ்டு, பெரிய பூபாகமோ என்பீர்கள். சின்னஞ்சிறியது! மொத்த மக்கள் தொகையே சுமார் நாற்பது லட்சம்தான்; அந்த நாடு சுதந்திரம் அடையப் போகிறதென்றதும், கரம் நீட்டுகிறார், நேரு பண்டிதர்.

காரணம்: அதுஒரு சுதந்திரபுரியாகப்போகிறது! ஐ.நா. சபையில் உறுப்பினராகவரவும் மனுப்போடப் படுகிறது, அதன் ஆதரவு தேவைதானே?

திராவிடமோ, பண்டைப் பெரும்நாடு. அமெரிக்காவும், ஆபிரிகாவும், ஆஸ்திரேலியாவும் கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னமேயே, தனக்கு நிகர் யாருமில்லை என்று வாழ்ந்த நாடு. புதிதாகச் சுதந்திரம் பெறப்போகும் கோல்டு கோஸ்டுக்குள்ள முக்கிய வருமானப் பொருளே, காப்பிக்குப் பதில் குடிக்கிறோமே அந்த கொக்கோதான்! திராவிடம், அப்படியா? வளம் தரும் வகைகள் ஆயிரமாயிரம்.

நிக்ருமாவின் நண்பர் பேடேமா என்பார் அமெரிக்காவுக்குப்போய் விடுதலை பெறப்போகும் தன்து நாட்டுக்கு புதிய அணைக்கட்டுத் திட்டம் கட்ட சர்வதேச பாங்கியார் பணம் கொடுக்க முடியுமா என்று இந்த வாரம் பேச்சு வார்த்தை நடத்துகிறாராம், மறந்துவிடாதீர்கள், நாற்பது லட்சம் மக்களைக் கொண்டவர், அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறார்.

ஆறுகோடி மக்களையும், ஆறுகளையும், கனிகளையும், இலக்கியப் புகழையும், உலகச் சிறப்பையும் பெற்ற நாமோ, இன்னும் அடிமையாகக் கிடக்கிறோம். அதோடு' "இந்தியாவைவிட்டுப் பிரிந்தால் வாழ முடியுமா?" எனும் எத்தர்கள் பேச்சைக் கேட்ட வண்ணம்.

அழைப்பு அனுப்பினாரே, நேரு நிக்ருமாவுக்கு. அந்த அழைப்பைபெற்றுக்கொண்டு, அவர் என்ன பதிலளித்தாராம் தெரியுமா? "ஐயா, மிக்க நன்றி. ஆனாலும், அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களின் தலைவனாக இப்போது இந்தியா வர விருமபவில்லை. மார்ச்சுக்குப் பிறகு சுதந்திரத் தலைவனாக வந்து உம்மைச் சந்திக்கிறேன்" என்பதாக.

'கோக்கோ' நாட்டுக்காரரால், இப்படிப் பேச முடிகிறது! 'கோலார்களை'க் கொண்டிருககும் நமது அண்ணாத்தைகளோ, நேரு ஜாடை காட்டினாலே ஓடோடி காலில் விழுந்து, அடிகக அடிக்கக் குட்டுப் பட்ட வண்ணம், 'ஐயோ, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் எங்களுக்கு அநீதி வழங்கலாமா?' என்று பல்லைக்காட்டிக் கிடக்கின்றனர்.

நாமும், நிக்ருமாக்களாகலாம்—அந்த நாள்வர, விடுதலை பெற்றுவரும் நாடுகள், நமக்கு ஊக்கத்தையும் உணர்ச்சியையும் அளிக்குமாக.

★

அறச்சாலை

தம்பி!

சிறைச்சாலை காண அழைக்கிறேன், உன்னை!

ஆரம்பமாகிவிட்டதா, அண்ணா, மாநிலமாநாடு ஒரு கிழமை இருக்கும்போதே சிறைச்சாலைக்குச் செல்ல அழைப்பா! ஏனண்ணா, நான் என்ன சித்தம் சோர்ந்து விடுவேன், அல்லது ஏதேனும் தத்துவ விவாதம் நடத்தித் தப்பித்துக்கொள்ளுவேன், அல்லது விதிவிலக்கு அளிக்கும்படி கேட்பேன், என்று எண்ணிக்கொண்டனையோ! ஏளனம் பேசுவது அழகா! நான், என்ன, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும சிறைச்சாலை என்ற கவிதையை அறியாதவனா. வேடிக்கை கேள் அண்ணா! நான் இந்தக் கவிதையைச் சுவைத்துப் படித்த இடமே சிறைச்சாலை! எந்தச் சமயத்தில், கழகம் கட்டளையிட்டதும் களம் புகாதிருந்தேன்! தொட்டிற் குழந்தை எனறு பிறர் கூறிய நிலையில் நமது கழகம் இருந்த நாட்களிலேயே, வடநாட்டு அமைச்சர்கட்குக் கருப்புக்கொடி காட்டி, திராவிடத்தின 'மனக்கசப்பை' வடவர் அறிந்திடச் செய்ய வேண்டும் என்று திட்டம் தரபபட்டதே, நாலென்ன ஓடி ஒளிந்தேனா, ஒய்யாரம் பேசினேனா. தடியடி தந்தனர்—தழும்பு கிடைத்தது! சிறையில் தள்ளினர்—கஞ்சிக கலயம் கிடைத்தது! நெஞ்சு சிறைக்கே அஞ்சும் நிலையில் இருக்குமாயின், நாம் பெற்றாக வேண்டிய திராவிடத்தைப பிடித்து ஆட்டிப் படைதது வரும் தீயர்கள சித்திர வதை செய்து நம் சிந்தையைச் சிதைத்திடத் துணிவரே, அப்போது என்ன ஆகும்! அத்தகைய கோழை உள்ளம் படைத்தவனல்ல, உன் தம்பி! திட்டம் தயாராகட்டும், அறப்போர் நடைபெறட்டும், ஆணையை ஏற்றுச் சிறைபுகத் தயாராகத்தான் இருக்கிறேன்; நான் மட்டுமல்ல, எண்ணற்றவர்கள்! எண்ணற்றவர்கள்!! சிறை செல்ல அழைப்பு வரும் எனபதை நான் எதிர்பார்த்தபடிதான் இருந்து வந்தேன், எனவே திடுக்கிட்டுப் போகவில்லை! மாநில மாநாடு மறவர்தம் படைவீடு! என்பதனை நான் அறிந்தவன். அங்கு நாம் கூடிப் பேசித் தீட்டப்போகும் திட்டம், ஆட்சியாளர்களின் உச்சி மோந்து மகிழ்வதா அல்லது உள்ளங்காலை முத்தமிட்டுக் களிப்படைவதா, எட்ட இருந்து கொண்டே கட்டிக்கரும்பே! என்று அழைப்பதா, அல்லது செஙகாயே! கனியாயோ? செந்தேனாய் மாறாயோ? என்று கொஞ்சுவதா, எனறு வெட்கத்தால் முகம் சிவக்க, ஆவலால் உள்ளம் துடிக்கச் சிலர் தீட்டியது போன்ற 'கண் சிமிட்டிக் கை ஜாடை காட்டும்' திட்டம்போலவா இருந்திடும்! ஆட்சியாளர்கள், நமது நியாயமான கோரிக்கைகளைப புறக்கணித்துள்ளனர், பொது மக்களின எழுச்சிக் குரலைத் துச்சமெனக் கருதுகின்றனர், நமது பிறப்புரிமையைப் பறித்துக்கொண்டவர்கள், நாம் பட்டிமாடுகளாகிக் கிடக்கவேண்டும் என்று கட்டளையிடுகின்றனர்—இந்தக் கேடு களைந்திட, நமநாடு நமதாக, நாம எத்தகைய முறையில் செயலாற்ற வேண்டும், செயலாற்றுங்காலை நாம் எத்தகைய காணிக்கைகளைக் களத்திலே தந்தாக வேண்டும்—என்ற இன்ன பிற பற்றியன்றோ, எண்ணித் துணிந்திடக் கூடுகிறோம் — சிறை தன் அகன்ற வாயைத் திறந்து நம்மை விழுங்கிடத்தானே செய்யும! இவை அறியாதவனல்ல — அறிந்தே, மாநில மாநாட்டுக்கு வந்திருந்து, என் பங்கினைச் செலுத்திட நான், முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டு, மற்ற நண்பர்கள் அதுபோன்றே ஆவலுடனும் ஆர்வத்துடனும், கடமை உணர்ச்சியுடனும் அஃதளிக்கும் களிப்புடன் புறபபட ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பது கண்டு பூரித்து நிற்கிறேன் —என்னை அறிந்திருந்தும், என் பணியின் தன்மை தெரிந்திருந்தும, என் உள்ளத்தில் மூண்டெழுந்துள்ள நாட்டுப்பற்று கொழுந்துவிட்டு எரிவது தெரிந்திருந்தும், அண்ணா! ஏளனம் செய்வதுபோல, சிறைச்சாலை செல்வோம் வா, தம்பி! என்று கூறுகிறாயே, சரியா, முறையா…

தம்பி! மளமளவென்று நீ, இவ்விதமாகத்தான பேசுவாய் என்பது தெரியும் எனக்கு. சென்ற கிழமை நான் உன்னை 'திருமணம' காண அழைத்தேன் — இந்தக் கிழமை சிறை காண அழைக்கிறேன், சிந்தனைச் சிறகடித்துச் செல்வதற்குத்தான். உண்மையாகவே சிறை செல்லும் கட்டம் பிறக்கும்போது, நீண்ட கடிதமா தேவை! கழகத்தின தீர்மானம் போதாதா! அதை நான் அறியேனா? சிறையிலே நீ, சித்தம் கலங்காது சிங்கமென உலவியதைக் கண்டு களித்தவனல்லவா உன் அண்ணன். இப்போது



காணக் கிடைக்காத காட்சி!

உன்னை அழைப்பது, சிறைக் காட்சியைக் காண!

காமராஜர் கடுங்கோபம்கொண்டு கனலே கக்குகிறார், செல்லுமிடமெல்லாம்.

கனல் கக்கவே, பல இடங்கட்குச் செல்லுகிறார்.

காரணம், அவர், தமிழகத்தின் அரசியலில், எப்பக்கம் திரும்பினாலும், வாழ்த்தும் வரவேற்பும், பாராட்டுதலும் உறவாடலும், காண்கிறார் — நமது முகாமில் முழக்கம் கேட்கிறது — எனவே அவருக்கு முகம் கடுகடுப்பாகிவிடுகிறது — புருவத்தை நெரிக்கிறார்—கனலைக் கக்குகிறார்!

பாவம், அதையேனும் செய்யட்டும்! வேறு என்ன, பிரமாதமான 'சேவை' செய்ய முடிகிறது அவரால்!!

அவரிடம் தம்பி, குறிப்பாக என்னைப்பற்றியும், பொதுவாக நமது கழகப் பேச்சாளர் குறித்தும் பலர் பல்வேறுவிதமான 'சாடி' கூறி அவரைச் சல்லடம் கட்டச் சொல்லிச் சிலம்பு போடுகிறார்களாம் — அவரும் ஆவேசம் கொண்டுவிட்டார்.

ஒவ்வோர் நாளும், பத்திரிகையிலே, 'பக்கத்துக்குப் பக்கம்' முதலமைச்சரின் 'அடாணு'வாகவே இருக்கிறது!

தி. மு. க. மீது கண்டனம்

தி. மு. க.வுக்கு எச்சரிக்கை

தி. மு. க. ஒரு குழப்பக் கட்சி

தி. மு. க-வை ஒழித்துக்கட்ட வேண்டும்

என்று தலைப்புகள் கொடுத்துக் கொடுத்து. இதழாசிரியர்களே சற்று அலுத்துவிட்டிருக்கிறார்கள்—காமராஜர், அலுக்காமல் சளைக்காமல், தி. மு. க. மீது 'தாக்குதலை' நடத்திய வண்ணம் இருக்கிறார்.

போகிற போக்கைப் பார்த்தால் தம்பி, அதிகநாட்களுக்கு, அவர், நம்மை வெளியே விட்டுவைக்க மாட்டார்போலத் தெரிகிறது.

எனவே, சிறைச்சாலைக்குள் எந்தநேரத்திலும் நாம் தள்ளப்படக்கூடும்! அதிலும் மாநில மாநாடு, நமக்கு நல்லதோர் செயல் திட்டம் தருகிறது என்றால், நாம், மாநில மாநாட்டின் வனப்புப் பற்றியும் சிறப்புக் குறித்தும் பேசி மகிழ வேண்டிய இடமே சிறைச்சாலையாகத்தான் இருக்கும்! சூழ்நிலை, அவ்விதம் உருவாகிக்கொண்டு வருகிறது.

ஆனால், தம்பி, நான் இப்போது உன்னை சிறை காண அழைக்கிறேன்!

அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை!

அடக்குமுறை ஆட்சி அடியோடு ஒழிக!

என்று முழக்கமிட்டுக்கொண்டு கருப்புக்கொடி காட்டவோ, மறியல் நடத்தவோ, வரி கொடாதீர்கள் என்று மக்களைக் கிளப்பிவிடவோ, வடநாட்டுச் சாமான்களைக் கொளுத்துங்கள் என்று இயக்கம் நடத்தவோ புறப்பட்டுவிடாதே — என்னோடு புறப்பட்டு வா, ஒரு சிறைக்காட்சியைக் காண்போம்.

அதோ பார், தம்பி, ஓர்முதாட்டி!

அந்தக் கண்களிலே கவனித்தாயா, ஓர் புத்தொளி பூத்திடுவதை! என்ன ஆவல்! எதத்துணை ஆர்வம்!

வழிமேலே விழிவைத்து நிற்கிற நிலையைப் பார்!

பட்டமரம் துளிர்த்திடும் என்கிறார்களல்லவா, பழமொழி! இதோ பார், 'பழுத்த ஓலை' ஓர் புத்தம் புது இளமை எழில் பெறுகிறது.

எதையோ, மிகமிக ஆவலாக எதிர்பார்க்கிறார் இந்த அம்மை!

குதூகலம் கொந்தளிக்கிறது மனதில் — முகம், அகத்திலே ததும்பும் அந்த ஆனந்தத்தைக் காட்டுகிறது.

சற்றுத் தொலைவிலே ஓர் காலடி சத்தம்! இங்கே அந்த அம்மையால் 'இருப்பு'க்கொள்ள முடியவில்லை! நீர் துளிர்க்கிறது கண்களில்—நிழலுருவம் கண்டதும்

மகளே,......

அம்மா,......

வாடி, என் அருமை மகளே,

வந்தேன் அம்மா, இதோ.

புரிகிறதா, தம்பி, இந்தப் புதுமைக் காட்சி.

தாயும் மகளும்!! சிறைச்சாலையில் சந்திக்கிறார்கள், மகளைக் காணப்போகிறோம் என்ற மகிழ்ச்சியால்தான் அந்த 'மாதரசி' மலர்ந்த முகமும் நீர் துளிர்க்கும் கண்களும் கொண்ட நிலையில் காட்சிதந்தார்கள்.

மகளைத் தழுவிக்கொண்டு முத்தமிடத் தாய் ஓட, தாயின் தாளைத் தொட்டுக் கும்பிட அந்தத் தையல் ஓடிவர, காண்கிறோம் நாம்.

காணக் கிடைக்காத காட்சியடா தம்பி, இது! கண்டோர், என்றென்றும் மறந்திட முடியாது, இந்தக் காட்சியினை.

சிறையிலே சந்திப்பு — தாயும் மகளும்!

ஐயோ! அம்மா! உனக்கு இந்தக் கதி வந்ததே—என்று மகள் கதற, என் விதி! என் வினை! என்ன செய்யலாமடி மகளே! நீ, பெற்றெடுக்கும் செல்வத்தைத் தூக்கி வளர்த்து மகிழ்ந்திடவும் கொடுத்து வைக்காத பாவியானேன்—என்று தாய், தலையிலடித்துக்கொண்டு அழ, சிறைக் காவலாட்கள், சரி! சரி! நேரமாகிவிட்டது! கிளம்பு! கிளம்பு! என்று உத்தரவு பிறப்பிக்க—இத்தகைய காட்சி அல்ல இது.

"அம்மா!"—என்ற தாயின் குரலில் ஓர் மகிழ்ச்சியும் பெருமிதமும் ஒலிககிறது.

"மகளே!" என்ற தாயின் குரலில் பாசமும் வெற்றி இன்பமும் கேட்கிறது.

சிறைப்பட்ட தாயுடன் சேர்ந்து சிறையில் இருக்க வருகிறாள் மகள்!

மகளும் என்னுடன் சிறையில்!—என்று மகிழ்ந்து பேசும் நிலையில், தாய்!

ஒப்பற்றதோர் காட்சியன்றோ இது!

பெற்றேன், என் பெருமையைப் பெரிதாக்கும் பண்புள்ள மகளை—என்று தாய் கூற—என் தாயின் உதிரம் எத்தகையது என்பதை என்னைக் கண்டு உணருமின் என்று மகள் கூற, தாயும் மகளும் என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும் என்று பலரும்பாராட்ட, இவரிருவரும் என் மக்கள்! இது போன்ற வீரப் புதல்வியரும் வீரப் புதல்வர்களும ஏராளம், ஏராளம்!—என்று **மராட்டியமாதா** மகிழ்,

கோழையும் வீரனவான்

இதென்ன எழுச்சி! ஈடில்லா எழுச்சியாகவன்றோ இருக்கிறது—என்று எதேச்சாதிகாரி கூட எண்ணித் திகைத்திட—காட்சி ஒன்று காண்கிறோம்.

காட்கில் பெற்றெடுத்த பொற் கொடி, அந்த மங்கை நல்லாள்!

அவரைக் கணவராகக் கொண்டவர், அந்தத் தாய்!

காட்கிலின் துணைவியாரும், மகளும், ஒருசேரச் சிறையிலே உள்ளனர்!

தாய், முன் நடந்து வழி காட்டுவது போல, முதலிற் சிறைப்பட்டார்கள். என் அன்னையைச் சிறையிலே தள்ளி விட்டால், அறப்போர் பட்டுவிடுமோ, அறிவிலிகாள்! இதோ, மகள் நானிருக்கிறேன், மாதா விட்டுப்போன இடத்திலிருந்து தொடர்ந்து பணியாற்ற என்று கூறுவதுபோல மகளும், சிறைக்கோட்டம் புகுந்தார்.

மராட்டியமே! உன் மண்ணின் வளமே வளம்! மாவீரன் சிவாஜி ஊட்டிச் சென்ற வீரம், இத்தனை தலைமுறைகளுக்குப் பிறகும், எத்துணையோ இன்னல் இடர்ப்பாடு இழிநிலை ஆகிய தாக்குதல்களுக்குப் பிறகும், கருகாமலிருக்கிறது, இக் காட்சியினைக் காணத் தருகிறது.

காட்கிலின் துணைவியாரும் திருமகளாரும், தாயகத்துக்கு வந்துற்ற கேட்டினை நீக்கிட, அறப்போர் நடத்திச் சிறைப்பட்டுள்ளனர்.

மராட்டியம், எவ்வளவு பூரிப்படையும்!

எனக்கா தளைகள்? ஏமாளிகளே, என்னையா அக்கிரமத் திட்டம் கொண்டு தாக்கத் துணிந்தீர்கள்! அதோ காணீர், என் கண்ணின் மணிகளை! வீராங்கனைகளை!! தாயும் மகளும்!! சிறையில் இருவரும்!! என் பொருட்டு, என்மீது வீசப்பட்டுள்ள வஞ்சக வலையை அறுத்தெறிய, வன்கணாளர் பூட்டிய தளைகளை நொறுக்கிட, தாயும் மகளும் சேர்ந்து சிறையில் புகுந்துள்ளனர். என்று கூறிப் பெருமை கொள்கிறது மராட்டியம்!

மராட்டிய மண்டலத்து மனை தொறும் மனைதொறும், தாயுடன் மகளும் சிறைபுக்க மாகாதையையன்றோ பேசிப் பேசி மகிழ்வர்!

கோழையும் வீரனாகாமலிருக்க முடியுமா!

காட்கில் காங்கிரஸ்காரர்—இன்னமும் காங்கிரசிலேதான் உறுப்பினர்.

கொடி தூக்கியாக மட்டுமல்ல, கோலோச்சும் நிலையையும் பெற்றிருந்தவர், காட்கில்.

காட்கில், டில்லியில் அமைச்சராகப் பணியாற்றியவர்—ஆற்றல் மிக்கவர்.

அவர் ஓர் காங்கிரஸ்காரர்—ஆனால், தானோர் **மராட்டியர்** என்பதை மறக்க மறுக்கும் பண்பாளர்.

மராட்டியர் என்ற உணர்வு இருக்கிற காரணத்தால், மற்றையோர் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற மமதைக் கொள்கை கொண்டவரோ எனின் இல்லை, இல்லை, மராட்டியர் யாருக்கும் மண்டியிட மாட்டார், யாரும் அவர்முன் மண்டியிட்டுத் தாழ்ந்திடத் தேவையுமில்லை என்ற மாண்புமிகு நோக்கம் கொண்ட நேர்மையாளர்.

ஆளமட்டுமே காங்கிரசுக்குள் புகுந்து கொண்ட சேதுபதியோ, என்று எண்ணிடாதே தம்பி, காட்கில், காங்கிரஸ் நடாத்திய கடும் போர்களில் ஈடுபட்டவர்.

இப்போதும், அவர் டில்லி தேவதைகளைத் தொழுதால் கேட்கும் வரம் பெற முடியும்.

வீரம், தீரம், அறிவு ஆற்றல், சேவை, தியாகம்—எல்லாவற்றிலும் அவர் காமராஜர்களைக் காட்டிலும் பன்மடங்கு மேலானவர்.

ஆனால் காமராஜரால் ஆட்சியின் முதல்வராகத் திகழ முடிகிறது.

காட்கிலோ, மகளையும், துணைவியாரையும் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.

காரணம், காட்கில் காமராஜர் ஆக மறுக்கிறார்— *காங்கிரஸ்காரர் என்பதற்காக, தாயகத்துக்குக்கேடுசெய்வோரைச் சளைக்காமல் சாடுகிறார் — குகைக்குள்ளே இருந்தபடியே சிங்கத்தின் பிடரியைப் பிடித்தாட்டுவது என்று காங்கிரஸ் மேடைப் பேச்சு ஒன்று உண்டு — காட்கில்தான் அந்தப் பேச்சுக்குப் பொருள் கிடைக்கச் செய்தவர்—காங்கிரசில் இருந்து கொண்டே, காங்கிரஸ் பெருந் தலைவர்கள் நடாத்தும் காதகத் திட்டத்தைக் கண்டிக்கிறார்!*

அவர், உள்ளே இருந்துகொண்டு போராடுகிறார்.

அவர் துணைவியாரும் திருமகளாரும், அறப்போர்க் களம் புகுந்து போராடி, சிறையில் வதிகிறார்கள்.

காவியம் புனையலாம், ஓவியம் தீட்டலாம், காணற்கரிய இக்காட்சி பற்றி — தாயும் மகளும் தாயக மானம் காக்க அறப்போரில் ஈடுபட்டுச் சிறைக்கோட்டம் சென்றது பற்றி!

இத்துணை எழுச்சி தரும் இச் சம்பவம், எதன் பொருட்டு? **பம்பாய்** நகரம் மராட்டியருக்கே சொந்தம்; அதனை மராட்டிய மாகாணத்துடன் இணைக்க வேண்டும்; வேறு வகையான ஏற்பாடுகள் எதனையும் மராட்டியம் ஏற்காது—*என்ற நோக்கமே, அறப்போருக்குக் காரணம்.*

மராட்டிய மொழி பேசுவோர் உள்ள பகுதிகள் ஒரே இராஜ்யமாக்கப்பட்டு மராட்டிய மண்டலம் உருவாகிறது; அதிலே பம்பாய் இல்லை! *இதற்கு, தாயும் மகளும் ஒருசேரச் சிறை புகும் வீரச் சம்பவம்*

(15-ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழ்

மாநில மாநாட்டை முன்னிட்டு "திராவிட நாடு" அலுவலகத் தோழர்களுக்கு ஒருவாரம் விடுமுறை அளிப்பதால், 20—5—56 வெளிவர வேண்டிய இதழ் நிறுத்தப்பட்டு, 27—5—56 முதல் வழக்கம்போல் வெளிவரும் என்பதை ஏஜண்டுத் தோழர்களுக்கும், வாசகர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி.

அழைப்பு

தென்னகத்து நன்னகராம் திருச்சி, தம்பி!
திராவிடத்தின் மையத்தில் திகழும் பேரூர்!
முன்னொருநாள் சோழனது மூதூர் ஈதாம்!
முட்டவரும் பகையெதையும் வெட்டும் வீரர்
இன்னமுந்தான் இருக்கின்றார் இங்கே என்றால்,
என்மீது தவறில்லை; எழுந்து பாராய்!
இந்நகரின் தென்திசையிற் பரந்திருந்த
எழிலான திடலெங்கே? இன்று காணோம்!

வள்ளுவரின் பெயராலே நகராம், இங்கே!
வானம்போல் விரிந்தபெரும் பந்தல் ஒன்று.
வள்ளுவரின் புகழ்போல வளருந் தன்மை,
வரலாறு காணாத புதுமை யாகும்!
வள்ளுவரின் குறள்போன்ற வடிவம் கொண்டோர்,
வாயிலிலே நிறுத்திவைக்க இருசிங் கங்கள்,
வள்ளுவர்நூல் நயம்போல உயர்ந்த தூண்கள்,
மாடங்கள் அமைக்கின்றார் மரத்தால் செய்து!

அண்மையிலே, அறிவகத்தின் அறையிற் கூடி,
அருமையுடன் பெருங்கலைஞர் ஆய்ந்து கூற,
வண்ணமிகு ஓவியங்கள் வரைந்து வைத்து,
வாழ்ந்துகெட்டோர் வரலாறு விளக்கு தற்குக்,
கண்கவருங் காட்சியொன்று காட்ட எண்ணிக்
கண்துயிலா துழைக்கின்றார், அன்புத் தோழர்!
மண்திருத்திப், புதரழித்து, மன்றம் கட்ட
மகிழ்வுடனே பலதோழர் உழைக்கின் றார்கள்!

மூச்செல்லாம் தமிழுக்கே! முயற்சி யாவும்
முன்னோர்கள் ஆண்டநாட்டை மீட்ப தற்கே!
பேச்செல்லாம் பிறர்வாழ! பிறந்த நோக்கம்
பேடிகளின் ஆதிக்கம் ஓடச் செய்ய!
தீச்சொல்லால் பயனில்லை; திருத்திப் பார்ப்போம்!
திராவிடரின் மரபென்றும் எடுத்துச் சொல்வோம்!
ஏச்செல்லாம் பூச்செண்டு மாலையாகும்
என்றுரைக்குந் தலைவரெலாம் இங்கே தானே!

குன்றாத செல்வங்கள் எல்லாம் உண்டு;
குனியாமல் வாழ்ந்ததற்கு வரலா றுண்டு!
அன்றாட நிகழ்ச்சிக்கும் வடநாட் டான்பால்
அடிபணிந்து கிடக்கின்ற உணர்வும் உண்டு!
என்றேனும் ஒருநாளில் மீட்சி பெற்று
எமதரசு காண்பதற்கும் ஏக்கம் உண்டு
ஒன்றாக இவற்றையெலாம் சேர்ப்ப தற்கு
உதவிடும்நாள் மே-திங்கள் பதினேழாம் நாள்!

மலைகளிலே கிடைக்கின்ற மணிகள் தேடி,
மண்ணுக்குள் புதைந்திருக்கும் பொன்னும் சேர்த்து
அலைகடலில் ஆழ்ந்துறையும் முத்தும் வைத்து
அணிகலன்கள் அமைக்கின்ற தொழில்வல்லார்போல்
நிலைமறந்தோர் பழங்கால சரிதம் தேடி
நெஞ்சத்திற் புதைந்திருக்கும் உணர்வைச் சேர்த்து
தலைகனத்தோர் ஆட்சிக்கு முடிவு வைத்துத்
தனிநாடு சமைத்திடுவோர் தயார்தான், வாராய்!

கருணாநந்தம்

வல்லத்தரசு முழக்கம்!

"கேரளத்து மக்கள், தமிழர்கள் எல்லோரும் திராவிடர்கள்தான். ஆந்திரர்கள் மட்டுமல்ல, இராஷ்டிரகூடர்கள்கூட திராவிடர்கள்தான். துரதிர்ஷ்ட வசமாக நாங்கள் பிரிக்கப்பட்டுவிட்டோம்"

"மகாராஷ்டிரர்கள்...?"

"அவர்களும், சந்தேகமில்லாமல் திராவிடர்கள்தான். இராஷ்டிரகூடர்களுக்கும் அவர்களுக்கும் நிறையத் தொடர்பு உண்டு"

*

டில்லி பார்லிமெண்டிலே, 23-4-56 அன்று புதுக்கோட்டை கே. எம். வல்லத்தரசு அவர்கள் பேசிய பேச்சினைக் கண்ணுற்றோம். ஏடுகள் மூலமோ என்பீர்கள, அல்ல, அல்ல, இதுபோன்றவர்கள் பேச்சினை வெளியிடவா இந்நாட்டு ஏடுகள் உள்ளன? முழங்கும் தமிழர்களை முத்தண்ணுக்களாக்கி, முயல் போன்றவர்களை 'மூளபலம்' மிக்கவர்களாகக் காட்டுவதுதானே அவைகளின் பண்பு.

டில்லி சென்றுள்ள நமது பார்லிமெண்டு உறுப்பினர்களைப்பற்றி நமக்கு மிகவும் குறையுண்டு. நேருவின் ஜோதியில் வாய்மூடி மௌனியாகிவிட்டார்களே என்பதால். அவர்களோ, எங்களுக்குப் பேசுவதற்கு எங்கே சந்தர்ப்பம் அளிக்கிருர்கள்? என்கிருர்கள். அளிக்கப்படும் சந்தர்ப்பத்தையும், நம்மைக் காட்டிக்கொள்ளப் பயன்படுத்த வேண்டும்—நமது நாட்டின் நிலையினை வடவருக்கு உணர்த்த வாய்ப்பாகக் கொள்ளவேண்டும் — தமிழன் என்ருேர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு என்று இங்கேயுள்ள சந்து பொந்துகளில் பாடிவிட்டால் போதாது; மாற்ருர் உணரும்படி செய்ய வேண்டும். அந்த நற்பண்பு, நண்பர் வல்லத்தரசு அவர்கள் அனுப்பிய பேச்சுச் சுருக்கத்தில் தென்படக் கண்டோம், மகிழ்ந்தோம்.

வல்லத்தரசு, தி. மு. க. உறுப்பினரல்ல, வேற்றிடத்திலே இருப்பவர். எனினும், நாம் கூறிவரும் கருத்துக்களை, வேற்றிடத்திலே உள்ளோம் என்பதால் அலட்சியப்படுத்தவோ, மாற்றியுரைக்கவோ இல்லை. மறத்தமிழன் ஒரு நாளும் அதனைச் செய்யான் நாட்டின் நலம்பேணுவோருக்கு நலம்தான் முக்கியம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார், அங்கு.

*

"தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை. பகுதிகள் எங்களுக்குக் கிடைக்காதது இருக்கட்டும். ஆனால், அந்தப் பகுதிகளை எங்களிடமிருந்து பிடுங்கி இன்னெருத்தருக்கு அளித்த முறையிருக்கிறதே அதைத்தான் நான் கவனமூட்ட விரும்புகிறேன். தேவிகுளமும், பீர்மேடும் தமிழ் நாட்டுக்குத்தான்சேரவேண்டும். கேரளத்தார், ஏதாவது பாது காப்புகள் தேவை யென்ருல் பெற்றுக்கொள்ளட்டும்; மறுக்கவில்லை. அதை விட்டுவிட்டு 76 சதவிகிதம் தமிழ் மக்கள் வாழும் பகுதியை தமிழ் நாட்டிடமிருந்து பிரித்து கேரளத்துடன் இணைக்கக் காரணம் என்ன? இந்தப் பகுதி இல்லையென்ருல் கேரளம் பொருளாதாரத் துறையில் பின்தங்கிவிடுமா! அல்லது அரசியல் துறையில்தான் அழிக்கப்பட்டுவிடுமா!! இப்படிச் செய்ததற்கு என்ன காரணம்?"

ஏ. எம். தாமஸ்:- உங்கள் கட்சியின் கருத்து என்ன?

வல்லத்:- நான், வல்லத்தரசுக்கட்சி. தமிழ் நாட்டின் கட்சியே, என் கட்சி. இந்த இடத்திலே, கட்சியைக் காட்டி என்னைப் பிரிக்க முயலவேண்டாம். தாமஸ், தாங்கள், எனக்கு அண்டையிலே வாழ்பவர்கள், என்னை விட்டு விட்டு நீங்களோ அல்லது உங்களை விட்டுவிட்டு நானே வாழ முடியாது. நாம் எல்லாம் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்.

*

இப்போதுதான், தலைப்பில் தந்ததுபோல விளக்கம் தந்திருக்கிருர். அதுமட்டுமல்ல, இந்தியா ஏப்போது ஒரே நாடாகயிருந்தது? அப்படிச் செய்ய முயன்றவர்களின் கதி என்னுயிற்று? என்பதையும், தெளிவு படுத்தி யிருக்கிருர்.

*

"இந்தியாவை ஒரே 'யூனிட்' டாக்கிவிட வேண்டுமென்று மொகலாயர்கள் கூட ஆசைப்பட்டார்கள். ஆகவே, அந்த ஆசை இப்போது ஏற்பட்ட ஒன்று அல்ல. கிருஸ்து பிறப்பதற்கு முன்பு, 2000-ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆண்ட சந்திரகுப்த மௌரியன் கூட மௌரிய சாம்ராஜியத்தை நிலை நாட்ட விரும்பினன்; அசோகனும், மாபெரும் சாம்ராஜ்யம் நிறுவ ஆசைப்பட்டான். இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று இப்படி ஆசைப்பட்ட மன்னர்கள் பலர்; அவர்களிலே, ஒருவன் அவுரங்கசீப்........காபூலிலிருந்து சிட்டகாங் வரையில், காஷமீரத்திலிருந்து காவேரி வரையில் மாபெரும் சாம்ராஜ்யத்தை உண்டாக்க விரும்பினன். அவன் அப்படி விரும்பியதாலேயே அவனுடைய அரசு, கலகலக்கலாயிற்று. மராட்டியர்கள் ஒருபக்கம், தமிழர்கள் ஒருபக்கம், வடநாட்டிலிருப்போர் இன்னெருபக்கம், அவனை எதிர்த்தனர். பல்வேறு முறையில் வாழும் மக்களின் மன உணர்ச்சிகளையும், ஆசாபாசங்களையும், உணராமல் அவர்களை ஒரே ஒரு ஆட்சியின் கீழ் கட்டுப் படுத்த முயன்ருன். அப்படி காங்கிரசும் விரும்பினுல்—இந்தியாவை ஒரு சாம்ராஜ்யமாக்க முயற்சித்தால் — ஆள்வது ஒரு தேசிய சர்க்காராகயிருந்தாலும், வாழும் மக்களின் ஆசாபாசங்களையும் மன உணர்ச்சிகளையும் உணராதவரையில், தூள் தூளாகச் சிதறியேவிடும். சந்தேகம் வேண்டாம். அழிவே, கிடைக்கும்"

மேலும் வல்லத்தரசு பேசுகையில் பம்பாய், மராட்டியருக்குச் சொந்தமென்றும்; அவர்களிடம் ஒப்படைக்காமல் காலதாமதம் செய்வது, நெப்போலியனுக்கு எப்படி ஸ்பெயின் தீராத தொல்லையாகயிருந்து அவன் அழிவுக்குக் காரணமாயிற்றே, அப்படி காங்கிரசின் அழிவுக்கு பம்பாயும் காரணமாகி விடுமென்று எச்சரித்தார்.

"பம்பாய் இரத்தம் சிந்துகிறது! மராட்டியம் புலம்புகிறது. அருகிலிருக்கும் கேரளம் ஆத்திரப்படுகிறது. தமிழ்நாடு, முணுமுணுக்கிறது. ஐக்கியமாகாணமோ, ஆதிக்கம் செலுத்த முனைகிறது. இப்படி, ஒவ்வொரு இடத்திலும் உணர்ச்சிகள் மோதும் போது, எப்படி மத்திய சர்க்கார் சரியாக இயங்கும்? சங்கடமில்லாமல் ஆள முடியும்?" ★

தனி அரசு

(மாதமிருமுறை)

ஆசிரியர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கிரௌன் அளவில் ஆறு பக்கங்களில் இரண்டே அணு விலையில் மே மாதம் 15ல் வெளிவருகிறது.

வருடச் சந்தா:
உள்நாடு ரூ. 3—0—0
வெளிநாடு ரூ. 4—0—0

எல்லா இடங்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு:—

தனி அரசு

131, பிராட்வே, சென்னை-1.

திராவிடத்தின் கனிப் பொருள்கள்

[புவியரசு]

நம் நாட்டு கனிப்பொருள்கள் எந்தெந்த தொழில்களுக்குப் பயன் படும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

1. குரோமைட்

இக் கனிச் செல்வம் நம் நாட்டில் அனேகமாக மேக்னசைட் கிடைக்கும் இடங்களிலதான் ஏராளமாகக் கிடைக்கின்றது. நம் நாட்டைக் காட்டிலும் உலகில் மற்றைய நாடுகளான சோவியத்யூனியன், துருக்கி, தென் ரொடீஷியா, தென் ஆப்பிரிக்கா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் நம்மைவிட அதிகம் தயாரித்தாலும், உயர்ந்த ரகமானதும், தொழில் துறைக்கு சேதாரமின்றி சுத்தம் செய்யத் தகுதியானதுமான குரோமைட் திராவிடத்தில்தான் கிடைக்கிறது. இப்பொருள் குறிப்பாக சேலம், அனந்தபூர், கிருஷ்ணா மாவட்டங்களில் ஏராளமாகக் கிடைப்பதோடு முதல் ரகத்தைச் சேர்ந்ததுமாகும்.

குரோமைட்டையும் இரும்புருக்கையும் 3.5% என்ற அளவில் கலந்த கலவையைப் பயன்படுத்தி கார்கள், லாரிகள், டாங்குகள், பெரிய பிரயாணிக் கார்களின் உடற்பாகங்கள், ரயில் பெட்டிகள், உறுதியான இரும்புப்பால வாற்படங்கள், ஆகியவற்றையும் குரோமைட்டை நிக்கல், உருக்கு, ஒளியுருக்கு ஆகியவற்றோடு கலந்த கலவையைப் பயன்படுத்தி, ஹெலிகாப்டர்கள், ராக்கெட்டுகள், போர்க் கப்பல் மேல் தளங்கள், கப்பற் கவசங்கள், பீரங்கி குழாய்கள், ஸ்டென் துப்பாக்கிகள், மின்சாரக் கருவிகள் ஆகியவையும் தவிர இரசாயனக் கலவைகள், பொறியியற் கலைச் சாதனங்கள், பால் பண்ணை இயந்திரங்கள் வெட்டுக்கருவிகள் ஆகிய பொருள்களையும் உற்பத்தி செய்யும் மாபெரும் தொழிற்சாலைகள் நிறுவும் வாய்ப்புள்ளது.

2. மைக்கா

உலகின் வேறெந்த பாகங்களிலும் கிட்டாத சிறந்தரக மைக்கா திராவிடத்தில்தான் கிடைக்கின்றது. உலகம் பூராவிலும் கிடைக்கும் (புதைந்து கிடக்கும்) மைக்காவில் 70o/o இந்நாட்டில் கிட்டுகிறது. இக்கனிப்பொருள் நெல்லூர், சித்தூர், கோவை, நீலகிரி, சேலம், விசாகை, மேற்கு கோதாவரி, திரு. கொச்சி, மைசூர் மாநிலம் ஆகிய இடங்களில் கிடைத்தாலும், நெல்லூர் மாவட்ட மைக்கா உலகப் புகழ் பெற்ற 'மஸ்கோவைட்' வகையைச் சேர்ந்ததாகும்.

இக் கனிச் செல்வம் மின்சாரத் துறைப் பொருள்கள் செய்யும், டைனமோக்கள், கன்டென்சர்கள், டெலிபோன்கள், கம்யூட்டர்கள், ஆகாய விமானங்களுக்குத் தேவையான ஸ்பார்கிங் பிளக்குகள், மோட்டார், ஆகாய விமான எஞ்சின்கள், சன்னல் அடைப்பான்கள், உலைகள், ஸ்டௌவுகள், பெயிண்டு, கிரீஸ், காங்கிரீட், கொழுப்பெண்ணை, ரப்பர் டயர்கள், ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பெரும் தொழிற்சாலைகளை, நியூஹாம் ஷயர், வட கொரோலீனு, அன்டாரியோ, க்யூபெக், ஒட்டாவா, ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் வசதிகளைவிட அதிகமான அளவு வசதியும், தக்க சீதோஷ்ணமும் பெற்றுள்ள திராவிடத்தில் சுமார் முப்பது இடங்களில் மிகப்பெரிய அளவில் அமைக்க வாய்ப்புள்ளது.

3. அலுமினியம் (பாக்சைட்)

சுமார் 60 ஆண்டுகளுக்குமுன், அலுமினியம் எந்த அளவில் இலாபகரமான முறையில் தயார் செய்யமுடியும் என்ற உண்மையை நம் நாடுமட்டுமின்றி உலக நாடுகள் எதுவுமே அறியாதிருந்தன. 1886 ஆம் ஆண்டு Mr. ஹால் என்ற 22 வயது அமெரிக்க இளைஞர் அலுமினிய ஆக்சைட்டை மின்கதிரியக்கத்தால் உருக்கப்பட்ட கிரையோலிட்டில் கரைப்பதன் மூலம் சிறந்தரக அலுமினியத்தை உற்பத்தி செய்ய இயலும் என்பதைக் கண்டுபிடித்தார்.

இத் தொழில் செய்ய மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் கனிப்பொருள் பாக்சைட் ஆகும். பாக்சைட், சேலம் சேர்வராயன் மலைத் தொடரில் மட்டும் ஏறத்தாழ 6½ மில்லியன் டன்கள் கிடைக்கின்றன. இக் கனிப்பொருளைக் கொண்டு இரயில்வேத் துறைக்குப் பயன்படும் பிரயாணிப் பெட்டிகள், மின்சார இரயில் பெட்டிகள், சாமான் பெட்டிகள் (Goods wagons) இரயில் வண்டி உள்ளுறுப்புகள், மோட்டார் உடல்பாகம், இயந்திரங்கள், ஆகாய விமான பாகங்கள், கப்பல் கட்ட தேவைப்படும் சாமான்கள், மின் உலைகள். டிரான்ஸ்பாமர்கள், மின்கதிரியக்க காப்புக் கருவிகள். அப்ரேசிவ்கள், பாக்சைட் கற்கள், மேலும், தோல் பதனிடுதல், காகிதம் செய்தல், குடி தண்ணீர் சுத்திகரிததல் போன்ற தொழில்களுக்குப் பயன்படும் சல்பேட், குலோரிட், ஹைரோக்ஸைட் போன்ற இராசயனப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை பெருமளவிலே அமைக்க வசதியுள்ளது.

மற்றோர் வகையிலும் இவ்வுலோகம் பயன்படுகின்றது. யாதெனில் சென்னை மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியும் மின்சாரத்தைப் பெற்றே வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சென்னை மாநிலந்தான் இந்திய உபகண்டத்திலுள்ள மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் கிராமங்களுக்கு அதிகமான அளவு மின்சாரத்தை வினியோகித்து வருகிறது. அவ்வாறு மின்சாரத்தை உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து மிகவும் தொலைவிலுள்ள இடங்களுக்கு எடுத்துச் செல்லும் கருவிகளும், கம்பிகளும், டிரான்ஸ்பாமர்களும் செய்ய இதுவரை செம்பு உபயோகப்பட்டு வந்தது. ஆனால் அலுமினியம் செம்பைக் காட்டிலும் பளு குறைந்தும் பலம் நிறைந்தும் உள்ளமையால் மின்சாரத் துறை சம்பந்தப்பட்ட எல்லாக் கருவிகளையுமே செய்ய அலுமினியத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இரண்டு வகையில் இலாபமாகும்.

ஒன்று மின்சாரத் துறையினருக்கு இலாபம், எவ்வாறெனில்

மின்சாரத்தை நெடுந் தொலைவுக்கு எடுத்துச் செல்லும் கருவிகளும், கம்பிகளும், அலுமினியத்தில் அமைவதால் பளு குறைவாக இருக்கும். ஆகவே அக் கருவிகளையும் தாங்கும் 'சுமைதாங்கிகள்' கம்பங்கள் ஆகியவை அதிகம் அமைக்க தேவையில்லாதுபோகும் அதனால் மின்சாரத் துறையினருக்கு இலாபம் கிடைக்குமாதலால் தூரத்தேயுள்ளவர்கள் குறைந்த செலவில் மின்சாரத்தைப் பெற்று தொழில்கள் அமைக்க இயலும்.

மற்றொன்று, மற்றைய மாநிலங்களைக் காட்டிலும் இம்மாநிலம் அதிகமான சுற்றளவுக்கு மின்சாரத்தை வினியோகிப்பதால் அதற்குத் தேவைப்படும் எல்லாக் கருவிகளையுமே அலுமினியத்தைக் கொண்டு செய்ய முற்படுவதன் மூலம் சென்னை மானிலத்தில் அலுமினியத் தொழில் சீரும் சிறப்புமாக நடைபெற இயலும்.

கானடா, ஐக்கிய அமெரிக்கா' ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகள் 90o/o மின் கருவிகளை அலுமினியத்தைக் கொண்டே தயாரிப்பதன் மூலம் இரண்டு வகையிலும் பயனடைகின்றன. அதே நிலையில் திராவிடமும் அத் தொழில் முறையில் வளர இயலும்,

மற்றும் பாக்சைட் அல்லாமல், அலுமினியம் உற்பத்தி செய்ய 'கோரண்டத்தை'ப் பயன் படுத்தி ஸ்வீடனும், பழுப்ப நிலக்கரி எரித்தூளைப் பயன் படுத்தி ரஷ்யாவும், சீனிக்களியைப் பயன் படுத்தி அமெரிக்காவும் ஆராய்ச்சிகள் செய்து வெற்றி கண்டுள்ளன. ஆகவே பாக்சைட் கிட்டாது 'கோரண்டம்', பழுப்பு நிலக்கரி, சீனிக்களி ஆகிய பொருள்கள் கிடைக்கும் மற்றைய மாவட்டங்களில்கூட அலுமினியத் தொழிற்சாலைகள் அமைக்க வசதியுண்டு.

அந்த வகையில், கோரண்டம்: சித்தூர், அனந்தபூர், கோவை, தென்கன்னடம், திருச்சி மாவட்டங்களிலும், பழுப்பு நிலக்கரி: தென்னுற்காடு, கிழக்கு மேற்கு கோதாவரிகள், தென் கன்னடம், மலபார், நெல்லூர்,நீலகிரி, லஞ்சை மாவட்டங்களிலும்; சீனக் களி எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக நெய்வேலியிலும் கிடைப்பதால், அலுமினியத் தொழிலை கிட்டத்தட்ட மாவட்டத்திற்கொன்ருக சிறிய அளவிலேனும் அமைத்து சிறந்த முறையில் தொழில் நடத்த இயலும். ★

படமும்-கவலையும்

"ஒரு நாட்டின் ஜீவநாடி அந்நாட்டில் அமையும் கனரகத் தொழிற்சாலைகளேயாகும் இருபதாம் நூற்ருண்டான இந்த அணு சகாப்தத்தில் ஒரு நாட்டின் சிறப்பை அந்நாட்டின் மற்றைய வளங்களையும் வசதிகளையும்கொண்டு அளவிடுவதைவிட அந்நாட்டில் பரவலாக அமையும் பெரும் கனரகத் தொழிற்சாலைகளையும் அவைகள் உற்பத்திசெய்யும் பொருள்களின் அளவையும் கொண்டு அளவிடுவதே முறையாகும்"

இது, நேரு பண்டிதரின் வாக்கு! அவர், இந்தியாவின் பிரதமர்!!

"கனரகத் தொழில் அமைப்பதன் மூலம்தான் நாட்டின் வளம் பெருகும். வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்பது முட்டாள் தனமான கருத்தாகும். சிறு குடிசைத் தொழில்கள் மூலம்தான் ஒரு நாடு உண்மையான சுபீட்சம் அடைய முடியும்"

இது, நேருவின் மந்திரிசபையில் வர்த்தக மந்திரியாக இருக்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூற்று.

டில்லி சர்க்காரின் போக்கு எப்படியிருக்கிறது, என்பதைத்தான் 'படம்' விளக்குகிறது.

தேஷ்முக் நிதியமைச்சர் சொல்லுகிருர், "அம்பர் சர்க்காக்களின் மூலம் நாட்டின் துணித் தேவையை பூர்த்திசெய்ய முடியும் என்று கருதுவது தவறு. அது இயலாத காரியம். அதற்காக ரூபாய் 80 கோடியைக் கொட்டுவது விரயமாகும்" என்று. ஆனால் ஐந்தாண்டு திட்ட மந்திரி குல்சாரிலால் நந்தா கூறுகிருர், "அம்பர் சர்க்காவே, குறைகளையும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும். அதை, ஆதரிக்க வேண்டும்" என்பதாக.

இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்கள் நேருவின் மந்திரிசபையிலே, நிலவுகின்றன.

கனரகத் தொழிலை வரவேற்கும் நேரு பண்டிதர் மற்ருெரு சமயத்தில் 'கைராட்டை'க்கும் வக்கீலாகிருர். அதுவும், ரஷ்யா, கனரகத் தொழிலில் சிரத்தை காட்டுகிறது என்று அறிந்த பிறகு இக் குழப்பம் அதிகரித்தே வருகிறது.

காந்தியமா? ரஷ்யாவா?—என்று கேட்கிருர்கள், பலர்.

படம், குழப்பத்தின் நிலையை சித்தரிக்கிறது.

பழைய காங்கிரஸ் தோழர் சங்கு கணேசன் என்பவரின் 'சங்கு' எனும் இதழிலிருந்து எடுத்தது; படம் நம்முடையதல்ல.

இக் குழப்பம் நீடித்தால், விளைவு என்னுகும் — படத்தை மீண்டும் பாருங்கள்!

★

முகப்பில்...

மக்கள்—வாயில்லாப் பூச்சிகள்!

மக்கள்—மண்டியிட்டுக் கிடக்கவேண்டியவர்கள்!

மக்கள்—மாடென உழைக்கிருர்களா? உழைக் கட்டுமே! வேறு எதற்காக அவர்கள் பிறந்தார்கள்?

மக்கள்—வரி கட்டித்தான் தீரவேண்டும். வறுமை யால் வாடுகிருர்களா? போக்கிரிகள்! வரி கட்டிவிட்டுப் பிறகு, வாடட்டும், வதைபடட்டும்-சாகட்டும்-கவலேயில்லே!

மக்களே இவ்விதமாகவெல்லாம் எண்ணிடும் மதோன்மத்தனுக இருந்த மன்னனின் சிரம், மக்க ளின் சீற்றமெனும் வாளுக்கு இரையாகிய கோரச் சம்பவம், பிரஞ்சுப் புரட்சி வரலாற்றிலே காணக் கிடப் பது.

மணிமுடி தரித்த சிரம், மண்வெட்டி தூக்கும் கரத்திடம் சிக்கினுல், கதி என்ன ஆகும் என்பதை எடுத்துக்காட்டிற்று பிரஞ்சுப் புரட்சி.

அடங்கித்தான் இருந்தனர் மக்கள், துவக்கத் கத்தில்! ஆளப் பிறந்தான் ஆண்டவன் அருளால், அவன் ஆதிக்கத்தை எதிர்ப்பது தேவனுக்கு எதிர்ப் புக் காட்டும் மாபெரும் பாபமாகும் என்றெண்ணிப் பயந்தனர்—பணிந்தனர்.

கொட்டும் குளிரிலும், கொல்லும் வெயிலிலும். வெட்ட வெளியிலும், ஆழமான கடலிலும், மலே உச்சியிலும், அடர்ந்த காடுகளிலும்—எங்கும்—எப் போதும்—மக்களுக்கு வேலே! வேலே! வேலே!

ஓயாமல் வேலே செய்தனர்.

பூனேக்கும் நாய்க்குட்டிக்கும் இனிப்புப் பண்ட மளித்து, 'இரக்கம்' காட்டினர் பிரபுக்கள்!

மனிதன் வதைபட்டான் — ஏறெடுத்தும் பார்த் திட மறுத்தனர்.

அந்தப் பிரபுக்கள் புடைசூழக் கொலுவீற்றிருந் தான், பிரஞ்சு மன்னன்.

மக்கள் பெருமூச்செறிந்தனர் — சல்லாபிகளின் சிரிப்பொலியில் இலயித்திருந்தான் மன்னன்!

மக்கள் கதறினர்—மல்லிகை தூவிய மஞ்சத்தில் கொஞ்சுமொழி பேசிய கோகிலங்களின் வளே ஒலி மட்டுமே, ஆள்வோனின் செவியில் வீழ்ந்தது.

பசி! பசி! மக்களுக்கு.

ருசி! ருசி!—மன்னன் கொலுவில்.

பாதிரிமார்கள் எப்போதும்போல பரமண்டலத் துப் பிதாவைத் தோத்தரித்து நின்றனர்.

பக்திகொண்டோர், பாதிரிமார்களுக்கு முறைப் படி காணிக்கை செலுத்தி வந்தனர்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டனர் மக்கள்.

*

நீங்கள் அழப்பிறந்தவர்களல்ல! ஆண்மை யாளர்களே! நீங்கள் வாழப் பிறந்தவர்கள்!"—என் றனர் உரிமைக் கிளர்ச்சியின் உன்னதத் தன்மை அறிந்த சிலர்.

நாங்கள் வாழ்வதா; நாங்களா? எப்படி? என்று கேட்டனர் ஏக்கம் குடிகொண்ட நெஞ்சினர்.

உடைமை உம்முடையது, ஏனெனில் உழைப்பு உம் முடையது என்றனர் கிளர்ச்சித் தலேவர்கள்.

ஆமாம்—என்றனர் மக்கள்.

ஆட்சி உம்முடையது! அரசன் உம்மால் அரச னுக்கப்பட்டவன்—என்றனர் அத்தலேவர்கள்.

உண்மைதான்!—என்றனர் மக்கள்.

மன்னன், மனம்போன போக்கில் மமதையுடன் நடந்துகொண்டால் அவனே நீக்கும் அதிகாரம் உம்முடையது, என்றனர் தலேவர்கள்.

இருக்கலாம்......ஆனுல்......என்று இழுத்துப் பேசினர் மக்கள்.

இந்தப்போக்கு இனி வேண்டாம்! உரிமை உம் முடையது, அதை உணருமின்—என்றனர் அத் தலேவர்கள்.

ஆயினும்,கொற்றவனுடைய வாள் கூர்மை யானது என்றனர் மக்கள்!

உங்கள் கோபப் பார்வையின் கூர்மையை விடவா? என்று கேட்டனர் அத்தலேவர்கள்.

புனல் நின்றது.

கனல் கக்கிற்று அக்கண்கள்!

காவலன், கலங்கினுன்.

மன்னன் கதி என்ன ஆகும் என்பதை எடுத் துக் காட்ட, மன்னன் சிரம் வெட்டப்படுவதைக் காட்டும் விதமான கேலிச் சித்திரம் தீட்டினுன் ஓர் ஓவியன்.

ஏழைகளின் குடிசைகளிலே சிரிப்பொலி கேட் டது!

அரண்மனேயிலே அழுகுரல் துவங்கிற்று!!

இறுதியில், புரட்சி வெடித்தது, மன்னன், சிரம் இழந்தான்.

முகப்பில் உள்ளது, இந்நிலேயைக் காட்ட, முன் கூட்டியே தீட்டப்பட்டதோர் கேலிச் சித்திரமாகும்.

மன்னன் சிரம் வெட்டுண்ட காட்சி!

மமதையாளர்கட்கெல்லாம் பயங்கரமூட்டத்தக்க எச்சரிக்கை.

மக்கள்!—மாளப் பிறந்தவர்கள் அல்ல.

மக்களே ஆட்டிப் படைக்கும் போக்கினனுக மன் னன் கிளம்பினுல், அவன் சிரத்தை வெட்டிடும் ஆற் றலும் அதிகாரமும் படைத்தவர்கள் என்ற பாடம் தரும் படம்.

முதல் 'வெள்ளி!'

[மா. கி. தசரதன்]

மண்மீதும், பொன்மீதும் அளவற்ற பற்றுக்கொண்டனர்!

சிற்றரசர்கள்போல் இருக்கவும், இயங்கவும் தலைப்பட்டுவிட்டனர்!!

மனமாச்சரியங்கள் பெருகி வளர்ந்து, கோபத்துக்கும் கொடுமைக்கும் ஆளாயினர்.

அரசியல் அதிகாரத்தில் தலையிட்டுத் தாங்கள் தடுமாறவும், பிறரைத் தடுமாறச் செய்யவும் தலைப்பட்டனர்.

தாங்கள் இட்டதே சட்டம், கூறியதே வேதம் என எண்ணினர்; எண்ணச் செய்தனர்.

விண்ணுலகில் வாழுகின்றார் வித்தகர் எனக் கூறியதுடன் நில்லாது, மண்ணுலகில் அவர் மறுபிறப்பு யாமே எனக் கூறுவது போல் இருந்தன — அவர்கள் சிந்தனை, சொல், செயல் எல்லாம்.

மனத்தகத்தே தோன்றி வளர்ந்து தழைத்திருக்கவேண்டிய பத்தி நெறி, புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டது. மதம் காக்கத் தோன்றியவர்கள் மனம் போன போக்கெல்லாம் போகத் தலைப்பட்டனர்.

* * *

இயேசு தெள்ளமுது பொழிந்து நல்வகையில் தமது மதத்தைப் பரப்பியவர் என்றாலும் அவருக்குப் பிறகுவந்த மதகுருமார்களில் மிகப் பலரின் நிலை இது! உலக வாழ்க்கையில் பற்றுக்கொண்டு உழலும் சாதாரண மனிதர்களின் வாழ்க்கைக்கும் அவர்களுக்கும் வேறுபாடே இல்லாது போயிற்று எனக் கூறலாம்.

இதனைக் கண்டு, பரமண்டலப் பாதை, சிலரின் சுகமண்டலத்துக்கு வழிகாட்டுவதாகிவிட்டதே என மனம் நொந்து, கர்த்தரின் உண்மை வழிகளை உரைக்கக் கொடிதூக்கிய முதல் வீரர் விக்ளிப் ஆகும்.

ஜான் விக்ளிப் பிறந்த நாடு இங்கிலாந்து. உலகமெலாம் இன்று புகழ்பரப்பி நிற்கும் ஆக்ஸ்போர்ட் கலாசாலை அப்போது ஒரு மொட்டு. அந்த இடம்தான் விக்ளிப்பின் கல்விக் கூடமாக முதலில் விளங்கிப் பின்னர் அவன் கொள்கைகளைப் பரப்பும் கலைக்கூடமாகத் திகழ்ந்தது. 1320-ஆம் ஆண்டு பிறந்து 1384-ல் இறப்பதற்கு இடையில் இருந்த ஆண்டுகளில் இந்தச் சிந்தனையாளர் சாதித்தவை பல.

மதத்துறையின் போக்கினைச் சாடிய இவரும், ஒருபாதிரியாகத் தான் பணிபுரிந்தார், முதலில். அப்பணியை மனமாரச் செய்து வந்தவரே பின்னாளில் அந்நெறியில் குறைகண்டு மனங்கொதித்து உணர்ந்த உண்மைகளை உரைக்கலானார்.

அந்தக் காலத்து மதகுருமார்கள் மதத்துறையில் நாட்டமின்றி மற்றத் துறைகளில் மூழ்கித் திளைத்துக் கிடந்தனர். பக்தி நிறையவேண்டிய கோயில்களில் பணத்தைக் குவித்துக்கொண்டு படாடோபமான வாழ்க்கையில் போட்டியிட்டு வெல்வார்போல் வாழ்ந்து வந்தனர். இந்நிலை போக்கிய நன்னிலை நிறுத்தநினைத்தார் விக்ளிப்; தொல்லை படரவும் துவங்கியது.

மற்றக் குருமார்கள் தங்கள் இயல்பையும் முறையையும் மாசுடையது எனக் கூறுவோனை வாளாவிடலாகாது என எண்ணிப் போப்பினிடம் முறையிட்டனர் இவர் மதத்தொடர்பான வேலைகளை சரிவரக் கவனிப்பதில்லை, என்று. அவரும் இவரை மதகுரு எனும் பதவியினின்றும் நீக்கிவிட்டார். 1370-ஆண்டு விக்ளிப் தன்னிலை எடுத்துக் கூறியும் போப்பாண்டவர் கூறியது மாற்றேரும் என அறிவித்துவிட்டனர்.

இங்கிலையில் இங்கிலாந்தின் அரசியலில் மதகுருமார்கள் (போப்பாண்டவர்) தலையிட்டுத் தங்கள் செல்வாக்கைக் காட்டத் தலைப்படவே அவர்கள்பால் வெறுப்புற்றிருந்த ஜான் ஆப் கண்ட் என்னும் கோமகனார் விக்ளிப்பைத் துணைகொள்ளலானார் போப்பாண்டவரை எதிர்க்க. இவன் துணை விக்ளிப்புக்கு இறுதிவரை பயன்பட்டது எனலாம்.

இயல்பாகவே மதகுருமார்களின் மீது வெறுப்புற்றிருந்த பொது மக்கள் விக்ளிப்பின் போதனைகளை விரும்பிக் கேட்டுப் பாராட்டிப் போற்றலாயினர். நாளுக்கு நாள் மக்களிடை விக்ளிப்பின் செல்வாக்கு வளர்வது கண்ட மதகுருமார்கள் "இவனை விட்டுவைத்தால் வேதனையை வளர்த்துக்கொள்வதாகும்" என எண்ணினர்; தண்டிக்க மனம் துணிந்தனர். எனவே 1377-ம் ஆண்டில் விக்ளிப்பின் மீது பெருங்குற்றங்கள் பல சுமத்தி 'இலண்டன் (பிஷப்) மதகுரு முன்னர் விசாரணைக்கு வருக' எனக் கட்டளையும் இட்டனர். ஜான் ஆப் கண்ட உடன்வர விக்ளிப் இலண்டன் சென்றார்; ஏனோ விசாரணை நடைபெற இயலாமற்போயிற்று.

விக்ளிப்பின் எதிரிகள் அமைதியடையாது அவரை மேலும் துன்புறுத்த எண்ணினர். உரோமில் இருந்த போப்பாண்டவருக்கு எழுதி விக்ளிப்பை விலக்கவேண்டினர். அவரும் இவர்கள் இச்சைக்கிணங்கியவராய் விக்ளிப்பின் கொள்கைகளை வெளிப்படையாகக் கண்டித்ததுமின்றி, அவரைத் தண்டிக்க வேண்டும் என காண

டர்பரி மதகுருவுக்குக் கடிதம் தீட்டினார்; "விக்ளிப்பை விசாரிக்க வேண்டும்; சிறைசெய்ய வேண்டும்; எனவே அவனை வெளியனுப்புக" என ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திற்கும் முடங்கற் கட்டளை பிறப்பித்தார்.

நெருக்கடி வந்துற்ற இவ்வேளையில் பல்கலைக் கழகம் சிந்தனையாளனைக் கைகொடுத்துக் காப்பாற்றியது இன்றேல் அவர் வாழ்வின் முடிவு வேறு வகையாகமாறி இருக்கலாம். பல்கலைக் கழகம் தனி இடம், வெளியார் அதிகாரம் அங்கே செயல்படல் கூடாதென்று எண்ணினர். 'வெளியே அனுப்பு விக்ளிப்பை' எனப் போப் கட்டளை அனுப்பி இருந்தும், "தாங்கள் அறையைவிட்டு வெளியேற வேண்டாம்" எனவிக்ளிப்பைக்கேட்டுக்கொண்டது பல்கலைக் கழகம் மதம் முக்கியம் என்று எண்ணிய போப் சிந்தனையைப் போற்ற மறுத்துவிட்டார்; ஆனால் பல்கலை வளர்க்கும் கழகம் விக்ளிப்பின் சிறப்புணர்ந்து தக்க பாதுகாப்பளித்துக் காப்பாற்றியது.

நெருக்கடியான அந்த நேரத்தில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் மட்டும் கொஞ்சம் அஞ்சி அடங்கி விட்டிருந்தால் உலகத்தின் சிந்தனையாளன் ஒருவன் காதை இடையிலேயே அற்றுப்போயிருக்கும்.

அறிவுக்கு வேலையே தராமல் அடங்கிக்கிடக்கச் செய்து வெறும் நம்பிக்கை ஒன்றனையே துணைகொண்டு இயங்க வேண்டிய மதம் ஏன்? எதற்காக? என்ற வினாக்களுக்கு அங்கு இடம் இருந்துவிடக்கூடாது. சிந்திக்கத் தெரிந்தவனுக்கு மதத்துறையில் வேலை இல்லை எனலாம்.

உண்மையான சிந்தனை செந்நெறி நடக்கத் தலைப்படுங் காலத்தில் எல்லாம் மதம் அந்தச் சிந்தனையாளனை மதவாதிகள் மருட்டி இருக்கின்றனர்.

விக்ளிப் தூவும் விதைகள் முளை கட்டிப் பயிராகிவிட்டால்....என்று எண்ணிய எண்ணமே போய் பின் மனதைக் கலக்கிக் குழப்பியது. ஆக்ஸ்போர்டுக்கு ஆணை அனுப்பினார் 'விக்ளிப் வெளியே வரட்டும்' என.

ஆனால் ஆக்ஸ்போர்ட்டோ அந்த ஆணையைத் துச்சம் என மதித்தது.

உங்கள் சிந்தனைக்கு விருந்து!

சி. என். ஏ

தீட்டிய

புதிய நூல்

நாட்டின் நாயகர்கள்

விலை அணா எட்டு

மாநில மாநாட்டில் விற்பனைக்குக் கிடைக்கும்

வளரும் சிந்தனைக்குத் தடைபோட மறுத்துவிட்டது.

ஜான் ஆப் கண்ட் அரசியலினின்றும் ஒதுங்கிய காலையிலும், விக்ளிப்பின் சொல்லுக்கு அரசியலில் செல்வாக்கு இருந்து வந்தது. இங்கிலாந்திலிருந்து போப்பிற்குப் பணம் அனுப்பலாமோ என்ற முக்கிய பிரச்னையில் அரசினருக்கு யோசனை கூறுவதற்கு அழைக்கப்பட்டார் விக்ளிப் 1377 ஆம் ஆண்டில். அரசியலில் இத்துணையளவு செல்வாக்குப் படைத்திருந்தும், மீண்டும் மத குருமார்களின் கொடுமைக்கு உட்பட வேண்டிய கொடுமை ஏற்பட்டது விக்ளிப்பிற்கு. விசாரணை என்ற மாயக் கோலை மீண்டும் ஒருமுறை பயன்படுத்த எண்ணினார்; முயன்றனர்' ஆனால் அம்முயற்சியும் எண்ணமும் முற்றுப்பெறாமல் முடங்கி விட்டன.

மதமும் — மத குருமார்களும் மனிதனின் ஆத்மாபற்றியவற்றில் ஈடுபடுதல் தவிர, அரசியல் போன்ற துறைகளில் ஈடுபடலாகாது என்று கூறினார் விக்ளிப். அதுபோது மதகுருமார்கள் தங்கள் எண்ணம்போல் ஆடிவந்த ஆட்டங்களுக்கு இக்கொள்கை பெரும் தடையாய் வந்து வாய்த்தது. எனவேதான் "யார் இவன் இதைக் கேட்க" எனச் சினந்து எழுந்தனர்.

இதைக்கூட அவர்கள் பொறுத்திருப்பர். ஆனால், விக்ளிப் விதைத்த வேறொரு கொள்கையைக் கண்டுதான் அவர்கள் வெருண்டனர்; வெகுண்டனர்; வீராப்பு பேசினர்; ஒழித்துவிடுகிறோம் என்றனர். மதத்தைக் காக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் மடாலயங்களுக்கு சொத்து இருத்தல் கூடாதென்றார், விக்ளிப்.

மடங்களில் சொத்தும் செல்வமும் சேர்ந்துவிடுவதினால் அங்கு என்னென்ன இழிதகைமையான செயல்கள் நிகழ்ந்து எத்துணையளவு மாசு படிந்துவிடுகின்றது என்பதனை இந்தக் காலத்திலேயே காணுகின்றோம். அச்சொத்துக்களின் நிர்வாகத்தை அரசினர் கண்காணிக்கவேண்டும் என்று சொன்ன அளவிலேயே இருபதாம் நூற்றாண்டில் ஒரு முதலமைச்சர் தன் பதவியைப் பறிகொடுக்கும் நிலையில் மதவாணர்களின் மனம் இருக்கின்றது எனில், பதினான்காம் நூற்றாண்டின் நிலை எதுவாக இருந்திருக்கும் என்று நினைத்துதான் பார்க்கவேண்டும்.

அந்தக் காலத்தில் மேற்கு நாடுகளில் மடங்கள்—கோயில்கள்—இது போல் சொத்தும் சுகமும் தேடித் தந்து குருமார்களைக் கெடுத்துவிட்ட காரணத்தினால்தான் விக்ளிப் இக்கொள்கையைக் கூறினார்; பகை தேடினார்.

அகில உலகத்தையும் அவற்றில் அடங்கும் அனைத்து உயிர்களையும் ஆண்டவன் படைக்கின்றார், காக்கின்றார்; மக்கள் எல்லோரும் அவர் பிள்ளைகளே எனக் கூறிவிட்டு, ஒரு கூட்டம் ஆண்டவனுக்கும் மக்களுக்கும் இடையே நின்றுகொண்டு ஏய்த்துப் பிழைக்கும் முறை எந்த நாட்டிலும்

இருந்துவந்திருக்கிறது. இடைத் தரகராக இருந்துவந்ததால் அவர்கள் பெற்றஇன்பம் எத்துணையோ!

ஆண்டவன் — வாதத்திற்காக இருப்பதாக ஒப்புக்கொண்டால்— தந்தை என்றால், எந்த மனிதனும் அவன் மகனாகின்றான். மகனுக்கும் தந்தைக்கும் இடையில் ஒருவன் நின்று நியாயம் பேசுவது என்பது அடாத செயலாகும். அப்பனைக் காணவும், பேசவும் என் துணை நாடு என்று கூறுவானை என்னென்பது!

ஆனால், மதத்துறையில்மட்டும் இந்தக் கொடுமை பல நாடுகளில் இடம் பெற்றுவிட்டிருக்கின்றது. புரோகித இனமும் பூசாரி இனமும் இந்த இடைக்கழி வேலையையே ஆற்றிவருகின்றன மதத் துறையில்.

* * *

ஆண்டவனிடம் பேசவேண்டுமானால் அதற்கெனத் தனி மொழி தேவை. தெருவில் போவாரும் வருவாரும் பேசும் இழிமொழியில் ஆண்டவனுடன் பேசக் கூடாது என்று கூறி, எல்லாம் தெரிந்த ஆண்டவனை ஏதும் அறியாதவர் ஆக்கிவிட்டனர், சில எத்து தெரிந்த ஏமாற்றுக்காரர்கள்.

இந்த நாட்டிலே வடமொழிதான் அதற்கான தகுதியையும் திறமையையும் பெற்றது எனக் கூறினர்; கூவினர். வடமொழியைத் தேவ பாடை எனவும் கூறி, அதற்குத் தெய்வத்தன்மையைக் கற்பித்தனர்.

அந்தத் தேவபாடையை யாரோ ஒரு சிலரே கற்கலாம், பிறர் கற்கக் கூடாது எனத் தடையும் இட்டுத் தருக்கி நின்றனர்.

வேத நூல்களை எல்லாம் அம்மொழியிலேயே அமைத்துப் பிறர் அறியா, 'மூடுமந்திரம் ஆக்கி'விட்டனர்.

நம்பிக்கைகொண்டோர் மன ஆறுதல் பெற கோயிலுக்குள் நுழைந்ததும், "அம்மையே அப்பா..." எனத் தொழுது நிற்க வழியின்றித் தமிழகத்தில் வடமொழியின் ஆட்சி ஓங்கிநிற்கின்றது. பக்தனின் ஊரையும்பேரையும் தமிழில் கேட்டு அதை வடமொழியில் ஆண்டவனிடத்தில் சொல்லும் முறை இன்றும் நிலவி வருகின்றது.

இது மிகமிக சாதாரண சிறு திருத்தம்...

காலமெல்லாம் மதத்திற்குப் பாடுபடவேண்டும் என்று தன் வாழ்க்கையை மதத்துறையில் ஈடுபடுத்தி செல்லுகின்ற இடங்களில் எல்லாம் சிவன் நெறிபற்றிப் பேசி துறவியாகியிருக்கும் குன்றக்குடியார் "மந்திரம் தமிழில் அருச்சனை தமிழில்" என்று குரல் எழுப்பினால் கோபம் கொழுந்து விட்டுப் படர்கின்றது சனாதன புரியில்.

"அப்படியும் பேசலாச்சோ' என்ற அகங்காரக் குரல் அக்கிரகாரத்தின் மூலை முடுக்குகளில் ஒலிக்கத் தொடங்குகின்றன.

உலகத்தில் அறியாமை விலகி அறிவு நெறி படர்ந்து, தமிழகத்திலும் பகுத்தறிவின் சுடர் ஒளி விட்டுத் துலங்கின்ற இந்நாட்களிலேயே இந்த நிலை என்றால், மக்கள் ஏமாளிகளாய் ஏதும் அறியாது எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்த அந்த நாட்களில் ஒருவன் இத்தகைய கொள்கையைப் பேசி இருந்தால் என்ன பாடுபட்டிருத்தல் வேண்டும்.

அத்தகைய நிலைதான் ஜான் விக்ளிப்பிற்கு உற்றது பதினான்காம் நூற்றாண்டில்.

இந்த நாட்டில் வடமொழிக்கு எந்த இடம் வைதிகத்தால் தரப்படுகின்றதோ அத்தகைய இடம் இங்கிலாந்தில் அந்த நாட்களில் இலத்தின் மொழிக்கு இருந்து வந்தது.

விவிலியமும்(பைபிள்) இலத்தீன் மொழியில்தான் இருந்துவந்தது. ஆலயங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் இலத்தின் மொழியிலேயே நிகழ்ந்தன.

இந்த நாட்டில் வடமொழியை அறியாதது போலவே அங்கேயும் சராசரி மனிதன் இலத்தீன் மொழி அறியாமல் இருந்துவந்தான். அந்த நிலையில்,

ஆண்டவனுக்கும் மனிதனுக்கும் இடையில் யாரும் தலையிடுதல் கூடாது என்று மதகுருமார்களுககே வேலை இல்லாமல் செய்ய முயன்றதுடன் கோயில்களில் எல்லாம் ஆங்கிலத்திலேயே (அது அவர்கள் தாய் மொழி) நிகழ்ச்சிகள் நடைபெறுதல் வேண்டும் எனவும் முழங்கினார் விக்ளிப்.

சொல்லைச் செயலில் செலுத்த வேண்டி இலத்தீன் மொழியில் இருந்த மறையாகிய விவிலியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்தார்.

இதுவரை விவிலியத்தையோ அதில் காணக்கிடைக்கும் நற் கருத்துக்களையோ காணாராய்க் கேளாராய்க் கிடந்த மக்கள் எல்லாம் ஆங்கிலப் பதிப்பைக்கண்டும் கற்றும் உண்மைகள் தெளியலாயினர்.

விவிலியத்தின் உண்மைகளை உணர்ந்துகொண்டதும் அவர்களின் உள்ளங்களிலும் புயல் வீசத் தொடங்கியது.

பணத்தையும் பணக்காரனையும் துச்சமெனமதித்த ஏசுவின் மொழிகளையும், இரக்கத்தின் இருப்பிடமாக இருந்த அவருடைய இனிய உள்ளத்தையும் கண்ட மக்கள் மதத்தின் பேரால் மாமன்னர்கள் பேரால் நடந்த மத குருமார்களையும் கண்டனர்; கோபம் மிக கொண்டனர். கூட்டங் கூட்டமாக விக்ளிப் பின்பால் சேர்ந்து அவரை ஆதரிக்கத் தலைப்பட்டனர்.

ஆமைகள்போல் அடங்கிக் கிடந்த மக்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டுத் துலங்கச் செய்துவிட்டது மதகுருமார்களுக்கு ஆத்திரத்தை முட்டியது. அதனால் விக்ளிப்பிற்கு வேதனைகள் தரவும் முயன்றனர்.

இவையே யன்றி மதவாதிகளின் மனம் வெதும்பும் மற்றோர் நற்கருத்தையும் விக்ளிப் தூவியவராவார்.

மதத்தின் உயிர் நாடிபோன்ற விதிக்கொள்கையை வற்புறுத்தும் ஏழை பணக்காரர் என்ற பாகுபாட்டையும் எடுத்தெறிய வழி கோலியவர் விக்ளிப்.

உடைமை அனைத்தும் பொதுவாக இருத்தல்வேண்டும் எனக் கூறியுள்ளார் விக்ளிப்.

இவ்வகையில் சமுதாயம் இருளில் கிடந்த நேரத்தில் அதில் ஒரு ஒளிக்கீற்றாகத் தோன்றிப் புகழ் பரப்பிய உத்தமர் விக்ளிப் ஆகும். பின்னாளில், மார்ட்டின் லூதர் செய்யஇருந்த மாபெரும் புரட்சிக்கு வித்தூன்றும் விழுமிய பணியாற்றியவர் விக்ளிப் ஆகும். அதனால் தான், 'சீர்திருத்தத்தின் விடிவெள்ளி' எனவிக்ளிப்பிற்கு விருது கொடுத்திருக்கின்றனர் வரலாற்று ஆசிரியர்கள்.

★

எதுபோனாலும் கவலையில்லை—பதவியே பெரிதாம்!

6-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டதோர் அறப்போர் நடந்து கொண்டிருக்கிறது.

இங்கேயோ, காமராஜர் கேட்கிறார், தேவிகுளமும் பீர்மேடும் எங்கே இருந்தால் என்ன? அவை எங்கோ போயாவிட்டன? நம்மிடம் இருந்தாலென்ன, மலையாள இராஜ்யத்தோடு இருந்தாலென்ன? என்று அறிவுரை கூறுகிறார்!

அந்தோ! திராவிடமே!!—என்று அலறித் துடித்து அழுவதா, அல்லது ஐயா! அதிமேதாவியாரே! தேவிகுளமும பீர்மேடும் எங்கே இருந்தாலென்ன என்று பேசுகிறீரே, காட்கில் குடும்பம், பம்பாய் எங்கிருந்தால் என்ன என்று பேசுகிறது? மராட்டியருக்குச் சொந்தமான பம்பாயை, மராட்டியரிடம் தான் தர வேண்டும் என்று வாதாட காட்கிலும், போராடிச் சிறைபுக அவர் துணைவியரும் மகளாரும் முன்வந்துள்ளனரே அறியீரா? என்று கேட்பதா, மேடாவது குளமாவது என்று பேசிடும் ஓர் மேதையை முதலமைச்சராகக் கொண்டோமே, நமக்கு இதுவும் வேண்டும் இதனினும் கொடியதும் வேண்டும் என்று நம்மை நாமே நொந்து கொள்வதா? என்ன செய்வதென்றே தெரியவில்லை!

வீர மராட்டியமே! ஒரு காலத்தில், கொடி கட்டி ஆண்டோம்! கொற்றம் மாற்றாருக்கு ஈட்டியாக, உற்றாருக்குக் கேடயமாக இருந்து வந்தது! எமது புகழ் எங்கும் பரவிற்று! இன்று, எமக்கோர் காட்கில் இல்லை,—அம்மட்டோ!—எமக்கோர் காமராஜர் இருக்கிறார், அவருக்கு தேவிகுளம் போனாலும் பீர்மேடு போனாலும் கவலை எழாது, பதவிக்குத் துளி ஆட்டம் என்று தெரிந்தாலோ, தேசியக் கவலை—தேசியத் திகில்—கிளம்பி விடும்—மராட்டியமே! உன் மலைகளிலே தவழ்ந்து, மனைகளிலே புகுந்து மக்களை மாவீரராக்கும் வீரத்தை, உனக்குப் பயன்பட்டது போக, மீதி இருப்பதில், ஒரு துளியை, எமது மாகாண முதலமைச்சருக்கு அன்பளிப்பாக அளிக்கவல்லாயோ?—என்றெல்லாம் கேட்டிடத் தோன்றுகிறதல்லவா?

தம்பி! புனா பம்பாய், ஷோலாப்பூர்—இங்கெல்லாம் சிறையில், மராட்டிய அறப்போர் வீரர்கள் ஆரசோச்சுகிறார்கள்! அவர்களை 'உள்ளே' அனுப்பிய ஆட்சியாளர்களை அச்சம் ஆட்டிப் படைக்கிறது.

மராட்டியத்துக்குப் பம்பாய் கிடைத்தாக வேண்டும் என்பதற்காக, மராட்டியத்திலே மட்டும், அறப்போர் நடைபெறவில்லை — மராட்டிய மாவீரர்கள், டில்லி சென்று இதற்காக அறப்போர் நடாத்துகிறார்கள்— சிறைப்படுகிறார்கள்.

காமராஜரோ, டில்லி சென்று தேவிகுளம் இல்லையா? சரி! பீர்மேடும் இல்லையா? சரி! சரி! செங்கோட்டையில் பாதி வேண்டுமா? சரி! சரி! சரி!—என்று கூறிவிட்டு வருகிறார். காரணம் என்ன தெரியுமா, தம்பி, அவர் கூறுவது? தேசியம் அவருக்கு அவ்வளவு ததும்பி வழிகிறதாம்!! அதனால் தமிழ்நாடு என்ற பெயர் வேண்டாமாம், தமிழரின் உடைமை எது போனாலும் கவலையில்லையாம், உரிமை யாவும் டில்லிக்குப் போயிற்றென்றாலும் துயரமில்லையாம்!

இப்படி, டில்லி, ஒவ்வோர் வகையான அநீதி இழைக்கும் போதும், காமராஜர் ஆவலோடு, ஒரு உத்தரவாதம் கேட்டுக் கொள்வார் போல இருக்கிறது.

சரி! தேவிகுளம் தந்து விடுகிறேன், செங்கோட்டையும் கொடுத்துவிடுகிறேன். முதலமைச்சர் வேலை, என்னிடம் தானே? அதற்கு என்றும் ஆபத்து இல்லையே?—என்று கேட்டு, உத்தரவாதம் பெற்றுக் கொள்வார் போல இருக்கிறது.

அதனால்தான், உரிமை பறிபோகும் போது, உடைமை கொள்ளைபோகும் போது, மக்கள் கோரிக்கை மண்ணாக்கப்படும் போது, சட்டசபைத் தீர்மானம் குப்பைக்கூடைக்குள் தூக்கி எறியப்படும் போது, சென்னை காங்கிரஸ் கமிட்டியின் முகத்தில் கரி பூசப்படும் போது — எத்தகைய இழிவு நேரிடும் போதும்—அதனாலென்ன? போனாலென்ன? குளமாவது மேடாவது! — என்று அவரால் பேசமுடிகிறது.

வங்கம் செல்வோம் தம்பி! எங்கள் சிங்கம் சுபாஷ் சந்திரபோஸ் என்று கூறிக் காங்கிரஸ்காரர்கள் பூரிப்பது வழக்கமல்லவா, முன்பெல்லாம் — அந்தப் போஸ் ஜெனித்த தங்கத் தரணி செல்வோம்.

சிறைக் கதவுகளெல்லாம் திறக்கப்படுகின்றன!

வங்கமாதாகீ ஜே! — என்று வெற்றி முழக்கமிட்டபடி, அணி அணியாக வீரர்கள், விடுதலை பெற்று வெளியே வருகிறார்கள்.

சிறைத் தண்டனைக் காலம் முடிந்துவிட்டதால் வெளியே வருகிறார்கள் என்பதல்ல—எதற்காகச் சிறை சென்றார்களோ அந்த இலட்சியம் ஈடேறிவிட்டது—அவர்களைச் சிறையிலே தள்ளிய சர்க்காரே, வெட்கத்தால் வேதனைப்பட்டுக்கொண்ட நிலையிலேயே வெற்றி வீரர்களை விடுதலை செய்கிறது.

பத்தாயிரம் வீரர்களுக்கு மேல் 'விடுதலை' பெற்றுவிட்டனர்; இன்னும் ஓரிரு ஆயிரவர், வெளியில் வரவேண்டுமாம.

பீகாரும்—வங்கமும் இணைகிறது—என்றார், வங்க முதலமைச்சர்!

இதைக்கூற, ஒரு முதலமைச்சரா? கூறுவோர் ஒரு வங்கத்தவரா? எங்கே அவர்? அவர் திருமுகத்தைக் காணவேண்டும்! தாயகத்தை மறந்து, மக்களை மதியாமல் துரோபதையைப் பந்தயப் பொருளாக்கிச் சூதாடிய தருமன்போல, காட்டான் எவனோ கேட்டான் என்பதற்காக நாட்டைக்கொடுத்த மன்னன்போல, நேரு துரைமகனார், அந்த நேரத்தில் தோன்றிய ஒரு விருப்பத்தைக் கூற, அவருடைய ஆசையை நிறைவேற்ற, ஆங்கில அரசை முதன் முதலில் ஆண்மையுடன் எதிர்த்த வங்கத்தை, ஆயிரமாயிரம் வீரர்களைச் சிறைக்கனுப்பி, செந்தீயாகத் தேசியத்தை வளர்த்த வங்கத்தை. வெடிகுண்டு வீசியேனும் வெள்ளையனை விரட்ட வேண்டும் என்ற அளவுக்கு விடுதலைப் போரார்வம் காட்டிய வங்கத்தை, காவலரும் நாவலரும் புகழத்தக்க கவிச்சக்கரவர்த்தியாம் தாகூரைத் தரணிக்குத் தந்த வங்கத்தை, எதிர்ப்புக்கு அஞ்சாச் சிங்கம், சுபாஷ்சந்திர போஸ் பிறந்த வங்கத்தை சுதந்

தேம்புந் தமிழனைத் தேற்றிட ஆற்றலற்றவர்

திரச் சுடரொளியை, தனி நிலை, தனி ஆட்சி, தனி அமைப்பு இழந்திடச் செய்த, அந்த 'தர்மவான்' எங்கே இருக்கிறார், சற்றே காட்டுங்கள், பார்ப்போம்! எமது கண்களின் கேள்விகளுக்கு அந்தக் கருத்துக் குழம்பியவர் என்ன பதிலளிக்கிறார் கேட்போம்? —என்று சீறிக் கூறியபடி கிளம்பினர் வங்க வீரர்கள். 12000 பேர் சிறைப் பட்டனர்!

பத்துப்பேர் சிறைப்பட்டிருந்தாலும் போதும், ஆங்கில ஆட்சியின்போது, பத்திரிகைகளிலே ஓலமும் ஒப்பாரியும், சூளுரையும் பக்கங்களை நிரப்பும்; படம் வெளி வரும்; பாடல்கள் கிளம்பும்; தலையங்கத்திலே தீப்பொறி பறக்கும்.

பன்னிரண்டாயிரம் அறப்போர் வீரர்கள் சிறை சென்றனர்—பத்திரிகைகள் பலமான இருட்டடிப்பு நடத்திவிட்டன.

ஒரு திங்களுக்குள் பன்னிரண்டாயிரம் பேர் சிறை சென்றுள்ளனர்—காமராஜர் மோடார் மீது வேறு ஏதோ மோடார் உராய்ந்தது பற்றிய செய்திக்குச்கிடைத்த இடம்கூட, இதற்குக் கிடைக்கவில்லை.

இருட்டடிப்புத்தான்செய்யமுடிந்ததே தவிர,வங்கத்தின் எழுச்சியையுமா அழித்திட முடிந்தது? முடிகிற காரியமா? வங்கத்தில், காங்கிரஸ் முதலமைச்சர் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது கூட,'விஷப்பரீட்சை'யாகிவிட்டது.

யாராவது ஒரு கல்லூரி மாணவன் கண்ணில் முதலமைச்சர் பட்டுவிட்டால், தீர்ந்தது. துரோகியே திரும்பிப்போ! பதவியை ராஜிநாமாச்செய் என்று முழக்கம் எழுகிறது. வங்கமென்ன, காமராஜர்களைத் தாங்கிக் கொள்ளும் போக்கிலா இருக்கும்! இங்குதான்நமக்கு, எது பறிபோனாலும் பரவாயில்லை, எத்துணை நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, ஆட்சியில் அமர்ந்திருக்க ஒரு பச்சைத் தமிழர் கிடைத்தால் போதும் என்று கூறத் தலைவர்கள் இருக்கிறார்கள். வங்கம் அவ்விதமா இருக்கும்? கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, கிளர்ச்சியில் ஈடுபட்டனர் — இப்போது **இணைப்பு கைவிடப்பட்டது.** என்று வங்க முதலமைச்சர், மக்களுக்குத் தெரிவித்துவிட்டார், டில்லிக்கு அறிவித்துவிட்டார்.

இங்கே சேதுபதியும் கோவை நிதியும், பொன்னேரி உழவும் பிறவும், தமிழ்நாடு தனியாக இருக்கக் கூடாது-எதனுடனாவது,எப்படியாவது இணைப்புவேண்டும்-தட்சிணப் பிரதேசம் வேண்டும் என்று பேசவும், யாரோ, எதையோ பேசிக் கொண்டுபோகட்டும், முதல் மந்திரி நான்தானே? அதிலே ஒன்றும் தகராறு இல்லையே! ரொம்பச் சரி! —என்று மகிழ்ந்து கூறி, ஊர்வலம் நடாத்தும் காமராஜரும் உளர்! அவர்கள் நீண்ட நாவினராகவும் உளர்!!

எழுச்சி பெற்ற மராட்டியம், வெற்றி கண்ட வங்கம், இவைமட்டுமல்ல. நெரித்த புருவத்தை மாற்றிக்கொண்டு, நேரு துரைமகனார் நாகர்களுக்கு, புதுப்புது சலுகைகளும், சிறுசிறு உரிமைகளும், தருகிறேன் என்று பேரம் பேசிடக் காண்கிறோம்.

இங்கோ, டில்லியிடம் இடிபட்டும் இன உணர்வு துளியும் பெறாத ஒரு தமிழர், 'தமிழ்நாடு' என்ற பெயரைச் சொன்னாலே தலையிறக்கமாக இருக்கிறது என்று தமிழகத்தில் பேசித் திரிகிறார் — அதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது என்கிறார் — காரணமும் காட்டுகிறார் அதற்கு—ஓட்டு, மக்கள் எமக்குத்தானே அளித்தனர் என்று கேட்கிறார்—இதுகள் தேர்தலுக்கு நின்றால் விடுவேனா, எனக்கென்ன அவர் இல்லையா? இவர் இல்லையா? என்கிறார் — இதைக் கூற ஊரூருக்கும் செல்கிறார்.

'ஓட்டு' இவருக்கும் இவர் கட்சிக்கும் மக்கள் அளித்தார்கள், தம்பி, இல்லை என்பார் இல்லை; ஓட்டு அளித்தது எதற்கு?

தொட்டதெல்லாம் பட்டுப்போகும் துரைத்தனம் நடத்தவா?

எடுத்ததற்கெல்லாம் டில்லிக்குக் காவடி தூக்கித் திரிவதற்கா?

தேக்கமும் அணையும் வடக்கே, சிறு பாசனத் திட்டம் தெற்கே என்ற ஓரவஞ்சனைக்கு வழிகோலவா?

அதிகாரமெல்லாம் டில்லிக்கே, நிதிக் குவியல் அங்கேயே நிலைமை உயர்வது அவ்விடமே, கைகட்டி வாய்பொத்தி கட்டியம் பார்ப்பது, திராவிடமே, என்ற இழிநிலை பெறவா?

செலவிடப் போகும் 6000 கோடியில், ஐயனே! எமை ஆளும் கோவே! அருள்கூர்ந்து 400 கோடியேனும் தாரும் என்று, இங்குள்ள மந்திரிகள் கெஞ்சிக் கூத்தாட, என்ன துணிவு இவ்வளவு கேட்க? என்று மிரட்டி, 170 கோடி தருகிறேன் என்று கூறி, அதையும் குறைத்திட, இதையேனும் கொடுத்தாயே, இறையே போற்றி! எமை ஆள அனுமதிக்கும் துரையே போற்றி! — என்று தோத்திரம் பாடிடும் துரைத்தனம் காணவா? எதற்காக 'ஓட்' அளித்தனர்.

தேம்பும் தமிழனைத் தேற்றிட ஆற்றலின்றி, வேதனையில் உழல் பவனைக் கவனிக்க மனமின்றி, விலைவாசி விஷமென ஏறினாலும், பண்டங்கள் பாதாளச்சிறை புகுந்தாலும், பாட்டாளி பதைபதைத்தாலும், எதற்கும் கவலை செலுத்தாமல், 'கனம்' ஆகிக் காலந் தள்ளும் 'கண்ராவி'க் காட்சி காணவா 'ஓட்' அளித்தனர்?

தடியடியும் சிறையும், துப்பாக்கிப் பிரயோகமும் நடாத்திக் கொண்டு, எதிர்ப்புகளை நசுக்கிடும் எதேச்சாதிகாரம் காணவா 'ஓட்' அளித்தனர்?

தமிழருக்குரிய 'நிலத்தை' இழந்துவிட்டு, தமது எழிலைத் தனத்தை மறைத்துக்கொள்ள தமிழர் தமது உரிமையையும் உடைமையையும், மானத்தையும் மாண்பையும், மரபையும் கெடுத்துக்கொள்ள மறுக்கும்போது அவர்களைத் தாக்கிடும் போக்குடன் நடந்துகொள்கிறார்களே, இந்த நிலை காணவா 'ஓட்' அளித்தனர்?

தம்பி! இவைகளையும், இவை தமக்கு மூலாதாரமாக அமைந்துள்ள தாயக விடுதலைப் பிரச்சினை பற்றியும், நாம் கூடிப்பேசிட, கண்டோர் வியந்திடும் வகையிலோர் மாமன்றம் எழும்பியுள்ளது, திருச்சியில்.

இரவு இப்போது பகலை அழைத்துப் பணியாற்றச் சொல்லிவிட்டு, ஓய்வுகொள்ளச் செல்கிறது—விடிகிறது, தம்பி.

இடியும் மின்னலும், மழையும் காற்றும், என்னையும் மாநாட்டு

ஆற்றல் உமக்குண்டு—அனைவரும் வருக!

அலுவலைக் கவனித்துக்கொண்டு இங்குள்ள நம் தோழர்களையும் மிரட்டிக் கொண்டிருந்த நள்ளிரவில், உன்னைப் பற்றிய நினைவு வந்தது, மாநாட்டுக்கான இந்த அழைப்பினை எழுதத் தொடங்கினேன்! இதோ, இரயிலுக்குக் கிளம்புவோர் ஏறிச் செல்லும் வண்டிகளின் ஒலி கேட்கிறது. உனக்காக — தம்பி — உற்சாகத்துடன் இங்கு மாநாட்டுக்கான எழிலை அளித்திட யாரார் பணியாற்றிக்கொண்டுள்ளனர் தெரியுமா!......

இதேபோது, திருச்சியில்வேறோரிடத்தில், மதியழகனும் வில்லாளனும், மாநாட்டுக் கொட்டகையிலும் திருச்சி நெடுஞ்சாலையிலும் அமைக்கவேண்டிய வளைவுகளுக்கான, எழுச்சி உரைகளை, ஆய்ந்தறிந்து தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நாலு நாட்களாகவே, நாவலரும், திராவிடன் ஆசிரியரும், நமது கழகச் சட்டதிட்டத்தில் திருத்தங்கள் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பிலும், பராங்குசமும், மணியும், ராபியும் — அவர்களுடன் கூடிப் பணியாற்றி என்னைக் குதூகலித்திடச் செய்யும் தோழர்களும், பம்பரமாய்ச் சுற்றுகிறார்கள், பணியிலே தரமும் வகையும் வளருகிறது; இடையிடையே என கோபத்தையும் தாங்கிக்கொள்கிறார்கள்; என்னை நன்றாக அவர்கள் அறிந்திருப்பதால், என் கோபத்தின் உட்பொருளை அவர்களால் உணர முடிகிறது; உணர முடிவதல், நமக்குத் தெரியாததா? இவன் யார், இதுசொத்தை அது சோடை என்று கூற? விளக்கமிலாத வீணன்! — என்று கூறி என்னை ஒதுக்கிடும் நிலையில் இல்லை, ஓடுகிறார்கள் — பாடுபடுகிறார்கள்—கொட்டும் மழை கண்டும், வீசும்பெருங்காற்றுக் கண்டும் நான் கிலிகொள்ளும்போது அவர்கள் எனக்குத் 'தைரியம்' ஊட்டுகிறார்கள்.

திருச்சி நகராட்சி மன்ற உறுப்பினரும், நமது கழகத் தோழருமான தோழர் நாகசுந்தரம் நற்பணியாற்றிக்கொண்டு வருகிறார். அவருடைய சீரிய முயற்சியால் மாநாடு சிறப்புப் பெறுகிறது. நகராட்சி மன்றம் நாவலருக்கு வரவேற்பளிக்கத் தீர்மானித்திருப்பது நாகசுந்தரத்தின் வெற்றிகளில் ஒன்று.

பழனி, அரசு, ராஜு, கருணு, மணி— ஓவியர்கள் பகலை இரவாக்கிக் கொண்டுள்ளனர். இளமுருகு — இத்துறைக்குப் பணியாற்ற, பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்ட வண்ணமிருக்கிறார்.

லாரிகள் வந்துவிட்டன — என்றோர் மகிழ்ச்சிக் குரல் கேட்கிறது. என்னவென்று சென்று பார்க்கிறேன், நமது புரட்சி நடிகரின் மேற்பார்வையில் தயாரான முகப்பு வந்து இறங்குகிறது. ஏ, அப்பா! என்னென்ன வளைவுகள்! என்னென்ன மாடங்கள்! எல்லாவற்றையும் பொருத்திக் கோத்து வண்ணமளித்தாலல்லவா தெரியும், எழில்! — என்று கூறுகிறார், சென்னை மாவட்ட மாஜி—கண்ணபிரான்.

கொடிகளும் தோரணங்களும் தயாரிக்க, ஈரோட்டிலிருந்து அழகிய இரு வண்ணத் துணி மூட்டைகளை முன்னாலே அனுப்பிவிட்டு, தையற்கலையுடன் கழகப் பற்றை உடன் கொண்டுவரும் தேவராசன் என்பாரை உடன் அனுப்பி வைத்துவிட்டு, கரூர் தோழர் சோமுவையும், கூடுவதும் குறைவதுமாக உள்ள வயற்று வலியையும் உடன் அழைத்துக்கொண்டு வந்துள்ள சம்பத்து, மாநாட்டுத் தீர்மானம் குறித்து கவனித்து வருகிறான்.

ஒளியும் ஒலியும் — வண்ணமும் வகையும் உள்ளதாக இருப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ராபி, வண்டுபோல் சுற்றி, மலர்போல் முகம் காட்டி, தேன்போலப் பேசி விருந்தளிக்கிறார்.

விதானம்—தேவையா? குளோப் லஸ்தர் தேவையா? என்ன வேண்டும், கொண்டுவந்து குவிக்கிறேன் —என்று கூறிக் குதூகலிக்கச் செய்கிறார் கண்ணதாசன்.

எல்லோரும் ஏதேதோ செய்துகொண்டிருந்தால், 'உண்டி'ப் பிரச்சினையை யார் ஏற்று நடத்துவது என்று கவனிக்காமலிருப்பதா — இதோ இராஜமாணிக்கம் எனும் ஆசிரியத் தோழரொருவரும், போளூர் சுப்பிரமணியமும் நீண்ட நாள் உணவு விடுதி நடத்தி அனுபவம் பெற்றவர்கள்போலப் பணிபுரிகிறார்கள் — சுவையான பகுதி அவர்கள் பணியில் காணக் கிடைப்பது, மறுவேளை சாப்பிட்டே ஆக வேண்டும் என்ற ஆசையை உண்போர் கொள்ளமுடியாதபடி செய்திடும் "பாகமுறை" என்று, உணவு விஷயத்தில் உருசிகரமான பிரியம் உள்ளவர்கள் இங்கு பேசிக்கொள்கிறார்கள்! இந்தச் செலவே அதிகம்தான் என்று எச்சரித்தபடி இருக்கிறார் நமது பொதுச் செயலாளர்.

எல்லாம் பந்தலைப் பொறுத்துத்தானே—என்று கண்ணால் கேட்டபடி, காற்றடியாகக் காட்சிதரும் வானமாமலையும், பார்ப்பவர்கள் மலைக்கவேண்டும், செலவுக் கணக்குப் பார்க்கும்போது நாம் ஐயோ இவ்வளவா என்று திகைத்திடும் நிலை கூடாது — இந்த முறையில், திட்டம் இருக்கவேண்டும் என்று பணியாற்றிக்கொண்டு வருகிற சாம்புவும், நமது மாநில மாநாட்டுக்கு ஆற்றிவரும் பணியின் வடிவம் மே 17, 18, 19, 20ல் நீ, காணத்தானே போகிறாய். தம்பி! எத்தனை எழில் முகப்புகள் தெரியுமா?

ஏறத்தாழ நாலாயிரம் செலவில் இரவு பகலென்று பாராமல், நமது இயக்கப் பற்றுக்கொண்ட கலை வல்லோர் உழைத்து அமைத்து சென்னையிலிருந்து கொண்டுவந்திருக்கும், முதல் முகப்பு அரண்மனை வாயில்போல் காட்சி தரும்.

அதில் நுழைந்து (கட்டணம் செலுத்தித்தான்!) உள்ளே வந்

தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

மாநில மாநாட்டுச் சிறப்பு மலர்

விலை அணா 8

13-5-56 அன்று எங்கும் கிடைக்கிறது.

தென்றல்,
மவுண்ட்ரோடு, சென்னை.

தால், தஞ்சை மாவட்டத்துக்கே தனிச் சிறப்பாக அமைந்துள்ள கீற்று அலங்கார முகப்பு, குத்தாலம் வேலைப்பாடுடன், உன்னை வரவேற்கும்.

இடையில், பட்டொளி வீசிப் பறந்திடும் கொடி, 50–அடி உயரமுள்ள 'கம்பம்' தனில் காணக் கிடைக்கும்.

இப்புறம் சென்றால், அலங்கார வளைவு, அதிலே வள்ளுவப் பெருந்தகையின் வடிவம், காட்சி தரும்—எதிர்ப்புறமோ சிறியதோர் மணிமாடம் எழில்தக்க அமைப்பிலே, புத்தர்!

வள்ளுவரைக் கண்டு மகிழ்ந்து, அவ்வழி சென்றால் ஓவியக்காட்சி, உள்ளத்தை மகிழச் செய்யும் — அறிவுக்கு விருந்தாகவும் இருக்கும்.

கொடிமரத்தையும் குத்தால வேலைப்பாட்டினையும் கண்டான பிறகு மேலால் சென்றால், தம்பி, மூன்றாவது, முகப்பு காண்பாய்! ஆங்கு, விலங்கொடித்த விடுதலை வீரன், எழுச்சி யூட்டி உன்னை வரவேற்கும் காட்சி உண்டு! மேலால் நடந்தால், போகப்போக வளர்ந்து கொண்டே போகும் — நான்கு அலங்காரத் தூண்களும், ஆற்றலை விளக்கும் அரிமா பதுமைகளும், பிறை வடிவான மேடைக்கு அழகளிக்க, மேலே இருந்து சின்னாளப்பட்டி வண்ண ஆடை, திரையாகி, கண்ணைக் கவரும் — அங்குதான், கழகத் தோழர்கள் புடைசூழ, நமது நாவலர் வீற்றிருப்பார்—அழகு தமிழில், ஆற்றல் உண்டு என்பதை எடுத்துக்காட்ட!

ஒரு கிழமையாக அவருடன் இடைவிடாது உரையாடும் வாய்ப்பும் பெற்றதால், என் நண்பர் இராஜகோபால் அல்லவா, கேட்கிறார், எனக்கென்று ஒரு வேலை தாருங்கள்! இவ்வளவுபேர் வேலை செய்யும்போது நான்மட்டும் வாளா இருப்பதா? என்று கேட்கிறார்! திராவிடத்திலே, புதியதோர் எழுச்சி என்று கூறினால் ஏது என்று கேட்கிறார்களே சிலர்—அவர்கள் இந்தக் காட்சிகளைக் கண்டாலல்லவா புரியும்! அவர்களின் கண்களும் அகலத் திறந்திடும் முறையில், தம்பி, இலட்சக் கணக்கிலே திரண்டிட வேண்டுமல்லவா, திராவிடர்கள்.

அனைவருக்கும் கூறி, அழைத்துக்கொண்டு வரத்தான் போகிறாய்; உனக்கில்லையா அந்த ஆர்வமும், பொறுப்பும்!

போ, தம்பி, எதை எழுத, எதை எழுதாமலிருக்க — கரமும் வலிக்கிறது, காகமும் கரைகிறது. சுருக்கமாகக் கூறிவிடுகிறேன், திராவிடத்தின் எழுச்சி எத்தகையது என்பதைக் காமராஜர்களும் உணர வேண்டும்–மாநிலமாநாட்டு வெற்றி மூலம்,

அந்த வெற்றியைத் தேடித் தரும் ஆற்றல் உனக்கு உண்டு என்பதால்தான் மண்டியிட மறுத்து வீரப் போரிடும் மராட்டியத்திலே, தாயும் மகளும் சிறைசென்ற காட்சியையும், வெற்றிபெற்ற வங்கத்தில் வீரர்கள் விடுதலை பெறுவதையும் காணச் சென்றோம்; கண்டோம்; இனி மாநில மாநாட்டிலே கூடுவோம்; மகத்தானதோர் எழுச்சி, திராவிடத்திலே என்பதை அனைவரும் அறிந்திடச் செய்வோம்; தாயக விடுதலைக்காகப் பணியாற்றிடும் தகுதியும் திறமையும் நமக்கு உண்டு என்பதை மே 17, 18, 19 20 நாட்களில் மேதினி அறிந்திடச் செய்வோம்; மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், தூற்றலுக்ும் தாக்குதலுக்கும் கலங்காதார் நாம் என்பதைக் காட்டிட, நமக்கெல்லாம் ஓர் நல் வாய்ப்பு—ஆமாம், தம்பி! அனைவருக்கும் கிடைக்கக்கூடியதல்ல, இத்தகைய வாய்ப்பு. நாடு, நம்மிடம் நிரம்ப எதிர்பார்க்கிறது—நல்லோர் நம்மிடம் நிரம்ப நம்பிக்கை கொண்டுள்ளனர்; நாம் அதற்கு ஏற்றவண்ணம் நடந்துகொண்டு, வெற்றி முரசு கொட்டிட வழி காண்போம் வா; 'மன்றம்' நடத்தும் நாவலர் கூட்டும் மாமன்றம் தனிலமர்ந்து, அறச்சாலையிலமர்ந்து பணியாற்றி

வாழ்க! வார்கவே!

வளமார் எமது திராவிட நாடு

வாழ்க! வாழ்கவே!!

என்ற பண் பாடிட வாராய்.

அன்பன்,

அண்ணாத்துரை.

மறுப்பு

மாநாட்டு அலுவல்களில் ஈடுபட்டு இருக்கும் இந்த நேரத்தில் சில ஊர்களிலிருந்து நமது தோழர்கள் டெலிபோனில் கவலையோடு ஒரு செய்திபற்றி விசாரிக்கத் தொடங்கியுள்ளார்கள். ஏதோ ஒரு பத்திரிகையில், தி. மு. க-விலிருந்து நான் ராஜிநாமா செய்துவிட்டதாக நானே கடிதமெழுதி அந்தப் பத்திரிகை ஆசிரியருக்குத் தெரிவித்திருப்பதுபோல், பிரசுரிக்கப்பட்டிருப்பது குறித்தே நமது தோழர்களில் சிலர் இத்தனை பரபரப்புக்கு உள்ளாகிவிட்டிருக்கின்றனர். பத்திரிகையின்மீது வந்த கோபத்தைவிட விசாரித்த தோழர்கள்மீதுதான் எனக்கு வருத்தம் உண்டாயிற்று. ஏனெனில் திராவிடர் கழகப் பத்திரிகைகளே பொதுவாகப் பிறர் மீது பழிகளைச் சுமத்துவதில் பொறுப்புணர்ச்சியையோ கண்ணியத்தையோ கடைப்பிடிப்பதில்லை, என்பது நாடறிந்த உண்மையாகும். அதிலும் அந்த கோஷ்டியிலேயே மிக மட்டரகமான கழிசடை வாரப் பத்திரிகையின் செய்தி கண்டு பரப்பரப்படைகின்றனர் நம்மவர்களில் சிலர் என எண்ணும்போது வருத்தம் மேலிடாமல் என்ன செய்யும்.

அந்த வாரப் பத்திரிகையில் வந்த செய்தி முழுக்க முழுக்க போக்கிரித்தனமான பொய்ச் செய்தி என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்வதுடன் சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியருக்கும் செய்தி பொய்யானதென்பதை உடனடியாகப் பிரசுரிக்குமாறு பணித்து அறிவித்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்

ஈ. வெ. கி. சம்பத்

குள்ளமான உருவம்தான்! நாற்காலியில் உட்கார்ந்தால், தரையைக்கூட அவனுடைய கால்கள் தொடாதாம்!! அலங்காரமான உடை கிடையாது; ஆடம்பரத்தை அவன் கண்டதில்லை. வாழ்க்கைத் துணைவியோ, அவனுடைய இதயம் கவர்ந்தவள். அவனுடன் வாழும்பேறே பெரும் பேறுதான்! ஆயினும், அதைமட்டும் சதம் என்றெண்ணாது, தன்னுடைய மக்களையும் மனதில் எண்ணி பாடுபட்டான். ஒருமுறை, அரசு, அவனை நாடு கடத்தியது. "அன்பே! நான் போய்வருகிறேன்," என்றான்! "நான்?" என்றாள், துணைவி. "காட்டிலும் மேட்டிலும், நீ வரமுடியாது கண்ணே!" என்றான். அவள் வாதாடவில்லைமூட்டைமுடிச்சுகளைக்கட்டிக்கொண்டு அவனுடனேயே கிளம்பினாள்!

சைபீரியாவுக்குத் துரத்தப்பட்டபோது, பொழுது போகவில்லை என்பதால் சதுரங்கம் ஆடக் கற்றுக்கொண்டான். ஒரே சமயத்தில் இரண்டு மூன்று தனிக் கட்டங்கள் போட்டு, இரண்டு மூன்று பேருடன் ஆடுவானாம் லெனின்!

சின்னஞ் சிறுவனாயிருந்த போது லெனின்மிகவும் கோழையாம். அவனையொத்த சிறுவர்களுடன் ஆடவும், பேசவும்கூட வெட்கப்படுவானாம். பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன், ஆங்கிலம் முதலிய நான்கு மொழிகளையும் அவன் அறிவானாம். கோழையாக இருந்த லெனினை வீரனாக்கியது ருஷியாவில் கோரத்தாண்டவம் புரிந்த அரசுதான்! லெனினுடைய அண்ணனை, அவன் ஜார் மன்னனைக் கொலை செய்ய முயன்றான் என்று குற்றம் சாட்டி தூக்கில் தொங்க விட்டது. செய்தியைக் கேட்ட லெனின் துடித்தான்! அத்துயரமே, அவன் இதயத்தில் அக்கினிப்பொறிகளை உண்டாக்கிற்று! அவனே பிறகு, புரட்சித் தீயாக மாறவும் செய்தான்.

அண்ணனுக்கு நேர்ந்த அக்கிரமத்தைக் கண்டித்த லெனினை, ஜார் சைப்பீரியாவிலுள்ள சிறுநகருக்குப்போகச்சொன்னான். அங்குதான் லெனினுக்கு ஏழைகள் படும்பாடு புரிந்தது. சாதாரண இறைச்சிக்காக அவர்கள் படும் வேதனைகளைக் கண்ணாரக் காணாவிட்டால் லெனினுக்கு அவ்வளவு தீவிரம் வந்திருக்குமோ, என்னவோ சந்தேகம்தான். 1891ல் மிகப்பெரிய பஞ்சம் வந்தபோதுதான், 'ஒருவனுக்கே இத்தேசம் உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்!' என்கிற முடிவுக்கு வந்தான். ஏதாவது செய்து இந்த சர்க்காரை மாறறவேண்டும் என்று தீர்மானித்தான். அது முதல் 25 ஆண்டுகள் ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்ஸ், போலந்து, ஸ்விட்சர்லாந்து, இங்கிலாந்து முதலிய இடங்களில் அலைந்தான். இலண்டனிலிருந்தபோது அடிக்கடி கார்ல்மார்க்ஸின் கல்லறைக்குப் போய் அமர்ந்திருப்பானாம்!

ஜாரின் ஆட்சியில் அடிக்கடி அவன் மீது கைது செய்ய உத்தரவு கிளம்புமாதலால், உழவனாகவும், படகோட்டியாகவும், ஏழைத் தொழிலாளியாகவும் மாறுவேடம் பூண்டு உலவுவானாம். அதற்காக பெரிய மீசைகளைக்கூட வளர்த்தது உண்டாம்! பெண் வேடம் புனையவும் நேர்ந்ததாம் ஒருமுறை!

சிறையில் பல நூல்களை எழுதினான் லெனின். அவைகளை அரசினர் கண்டுபிடித்துவிடக் கூடாதே என்பதற்காக, இங்கிக்குப்பதில் பாலாலேயே எழுதுவானாம். அப்படி எழுதியதை வெந்நீரில் நனைத்து எடுத்தால் எழுத்துக்கள் நன்றாகத் தெரியும். இதே முறையைப்பின்பற்றும்படி, எல்லாப்புரட்சிவாதிகளையும் செய்தான். சிறையிலிருக்கும்போது இப்படி ஏதாவது இரகசியக் கடிதம் வந்து சேந்தால், காவலாளியைக் குடிக்க தேநீர் கொண்டுவரச் சொல்லி, அதில் நனைத்துப் படிப்பானாம்!

ஜாரின் ஆட்சி முடிந்து, லெனின் கைக்கு அதிகாரம் வந்தபோது, நாடு, பல பிரச்னைகளை சமாளிக்கவேண்டியிருந்தது. வறுமை பல துறைகளில் வாட்டியது! சர்க்கரைகூட கிடைக்காது தத்தளித்தார்கள் மக்கள். அதைக் கேள்விப்பட்ட லெனின்,: 'மக்கள் அல்லாடும் போது எனக்குமட்டும் ஏன் சர்க்கரை?' என்று தேநீரில் சர்க்கரை போட்டே குடிக்கவில்லையாம்-நிலைமை திருந்தும் வரை! ரஷ்யா முழுதும் அவன் கட்டளைக்குக் காத்திருந்தது. என்றாலும் சாதாரண ஆடம்பரத்தைக்கூட அவன் விரும்பியதில்லை. விசித்திரம் என்னவென்றால், காரியதரிசிகள், துணைக் காரியதரிசிகள், கவுரவக் காரியதரிசிகள், அந்தரங்கக் காரியதரிசிகள், வேலையில்லாத மந்திரிகள் இப்படித் தேவைப்படுகிறதல்லவா நேரு போன்ற புதிய துரைமகனார்களுக்கு? லெனின், தன்னுடைய ஆட்சிப் பொறுப்புக்கு உதவி செய்ய ஒரு காரியதரிசியைக்கூட வைத்துக் கொள்ளவில்லையாம். கடிதம் எழுதுவதுகூட அவன்தானாம்! ஐந்தாண்டுகளுக்கெல்லாம், வாதநோய்க்கு ஆளாகி, வாய் கோணி, பேசவும் இயலாமற் போனான். வலது கரம் வாதத்துக்கு இரையானதால், அந்த நிலையிலும், இடது கரம் மூலம் எழுதக் கற்றுக்கொண்டானாம்! இரண்டு ஆண்டுகள் படுக்கையில் தத்தளித்த அம் மாவீரன், சாகும் வரையில் அடிக்கடி உச்சரித்த சொல், "ஐயோ! நாட்டுக்குச் செய்யவேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறதே!" என்பதுதான்.

தியாகம்—ஆர்வம் — பொதுப்பணியில் ஊக்கம் காட்டிப் பாடுபட்ட லெனினுடைய உருவையும் பெயரையும் விடுதலை விரும்பிகளாகிய நாம், நம்முடைய மாநாடு கூடும் இந்நேரத்தில் நினைத்துப் பார்க்கத்தான் வேண்டும்.

"வண்டு"

திராவிடமே! திருச்சிக்கு வாராய்!!

16—5—56 புதன்

காலை 6 — திருச்சி இரயில் சந்திப்பில் மாநாட்டுத் தலைவருக்கு வரவேற்பு.

10—1 பொதுக் குழு

1—3-30 இடைவேளை

3-30—7 பொதுக் குழு

17-5-56 வியாழன்

காலை 9 ஊர்வலம்

நண்பகல்

1 கொடியேற்று விழா

மாலை4 புத்தர் வரலாறு —கலைவாணர் என். எஸ். கே.

5 கண்காட்சித் திறப்பு —என் வி நடராசன்

5-30 இன்னிசை அரங்கு —கே. ஆர். ராமசாமி

6-30 நாதசுர இசை —திருவாவடுதுறை இராசரத்தினம்

8 மூவலூர் இராமாமிர்தத்தம்மையாருக்கு விருது வழங்கல் —அண்ணா பாராட்டுரை.

இரவு

'புது வெள்ளம்'

—S. S. இராசேந்திரன் குழு

18-5-56 வெள்ளி

காலை

7-30 | 8-30 பிரதிநிதிகள் கூட்டம்

9 இசை —நாகூர் அனீபா ஜி. கஸ்தூரி

11 துவக்க உரை—ஜி. பி. சோமசுந்தரம்

12 வரவேற்புரை—அம்பில் தர்மலிங்கம்

மாலை

3-30 இசை —பி.எஸ்.செல்வா

4-30 தலைவர் முன்மொழிதல்

4-45 வழிமொழிதல்

6 தலைவர் முன்னுரை

இரவு

மணிமகுடம்

—S. S. இராசேந்திரன் குழு

19 5-56 சனி

சிறப்புச் சொற்பொழிவுகள்

விடுதலைக் கிளர்ச்சிகள்	...கே. ஏ. மதியழகன்
தொழிலியல் புரட்சி	...காஞ்சி கலியாணசுந்தரம்
உரிமைக் கிளர்ச்சிகள்	...அருண்மொழி
ஜனநாயகம்	...கி. மனோகரன்
கல்வித்திட்டம்	...வி. ஜி. இராமையா
நாட்டுப் பணியில் மாணவர் பங்கு	...தில்லை-வில்லாளன்
தமிழ் இலக்கியத்தில்-அரசியல் கருத்துக்கள்	...க. அன்பழகன்
தனிநாடு அமைப்பும்-பொருளாதார வசதிகளும்	...என். எஸ். இளங்கோ
திராவிடத்தின் உலகத் தொடர்புகள்	...மு. கருணாநிதி
தாய்க்குல வரலாறு	...சத்தியவாணிமுத்து
மொழிப்பிரச்னைகள்	...கண்ணதாசன்
கலையில் கருத்துப்புரட்சி	...சி. பி. சிற்றரசு
தத்துவ வரலாறு	...டி. கே. சீனுவாசன்
புத்தர் நெறி	...ஏ. வி. பி. ஆசைத்தம்பி
உலகைத் திருத்திய உத்தமர்கள்	...இராம. அரங்கண்ணல்
உலக அமைதி	...ப. உ. சண்முகம்
மறைந்த மாவீரர்கள்	...என். வி. நடராசன்
கொள்கைக் குழப்பங்கள்	...ஈ. வி. கே. சம்பத்

இரவு

அட்வகேட் அமரன்

—M. G. இராமச்சந்திரன் குழு

20—5—56 ஞாயிறு

காலை

7-30—8-30 பிரதிநிதிகள் கூட்டம்

9 தீர்மானங்கள்

மாலை

6 அண்ணா சிறப்புரை

7-30 தலைவர் முடிவுரை

இரவு **சுமைதாங்கி**

—M. G. இராமச்சந்திரன் குழு

எழுச்சி பெற, கலை விருந்து அருந்த, முடிவுகள் எடுக்க, அனைவரும் வருக.